# இன்னும் எத்தனை காலமோ?

கவிதை நூல்




கவிஞர் இரா. ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை காலமோ?

## கவிதை நூல்


தொகுப்பு
கவிஞர் இரா.ஜெயக்குமார்
(பீ.ஏ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இன்னும் எத்தனை காலமோ? |
| ஆக்கம் | : | இரா. ஜெயக்குமார்<br>(பீ.ஏ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா) |
| பிறப்பிடம் | : | கேணியடி, குப்பிளான் தெற்கு குப்பிளான் |
| வசிப்பிடம் | : | 68/8, சிவன் வீதி.<br>உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| தொ.பே.இல | : | 0772855413 |
| முதற்பதிப்பு | : | 2023 புரட்டாதி |
| ISBN | : | 978-955-43965-5-5 |
| பக்கங்கள் | : | xii + 98 |
| விலை | : | 400 ரூபா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அமரர்
சிவக்கொழுந்து இராசா

ஏடெடுத்த நாள்முதலாய்
என் கல்விக் கண்ணாகி....
வைகறை மணியொலியாய்
வந்தென்னைத் துயிலெழுப்பி....
படுக்கையில் துயிலும்வரை
பழங்கதைகள் பல சொல்லி....
வாசிக்க வழி காட்டி....
தாய்க்குப்பின் தாயாகி ....
உணவாக்கி...உயிர்காத்து....
என்றென்றும் என்னுடன் வாழும்
என் இனிய தந்தை
சிவக்கொழுந்து இராசாவுக்கு....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி பத்திரிகை ஆசிரியரின் வாழ்த்துச்செய்தி

எமது அருமை நண்பன் அதிபர் கவிஞர் ஜெயக்குமார் அவர்களின் இன்னும் எத்தனை காலமோ? எனும் கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கவிஞர் ஜெயக்குமார் அவர்களின் கவிதைகள் சமூக நலன் சார்ந்தவை. அநீதிக்கு எதிரானவை. சமூகத்தில் நடக்கின்ற அநீதி கண்டு துடித்துப் போகின்ற நல்ல உள்ளம் அவரிடம் இருப்பதனாலேயே சமூக அநீதியை எதிர்த்து அவரால் கவிதை ஆக்கமுடிகிறது. அவரின் கவிதை வரிகள் உயிரோட்டமானவை. சமகால சூழலைப் பிரதிபலிப்பவை இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்பர். கவிஞர் ஜெயக்குமார் அவர்களின் கவிதைகள் காலத்தின் கண்ணாடியாக இருப்பதை யாராலும் நிராகரிக்க முடியாது.

நெஞ்சு பொறுக்குதில்லையே... என்று குமுறுகின்ற பாரதியின் மனநிலையை அவரின் கவிதை வரிகள் நமக்குப் புலப்படுத்துவது போல, கவிஞர் ஜெயக்குமார் அவர்கள் மக்கள் சமூகத்தின் பால் கொண்ட கரிசனை காரணமாக சமூகப் பிறழ்வுகளை - சமூக அநீதிகளை - பக்க சார்புகளை எதிர்த்துப் புரட்சி செய்வதை அவரின் கவிவரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

அவரின் கவிதைகள் வலம்புரி - சங்குநாதத்தில் வெளிவந்து, வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தன என்ற செய்தியை இவ்விடத்தில் பதிவு செய்வதையிட்டு யான் பெருமையடைகிறேன்.

அவரின் கவிதைத் தொகுதி சிறப்புடன் வெளிவருவதற்கும் தொடர்ந்தும் அவரின் கவிதைப் படைப்புகள் வெளிவரவும் இறைபரம்பொருளின் ஆசி அவருக்கு எப்போதும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**நல்லையா விஜயசுந்தரம்,**
**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பத்திரினை ஆசிரியரின் வாழ்த்துச்செய்தி

இன்னும் எத்தனை காலமோ? இரா.ஜெயக்குமாரின் இரண்டாவது கவிதைத் தொகுதி. ஆசிரியராக, அதிபராக கல்வித்துறையில் அயராது பாடுபடும் ஜெயக்குமாருக்குள் எப்போதுமே ஒரு கவிஞன் நிரந்தரமாகக் குடி கொண்டிருக்கிறான். அந்தக் கவிஞன் சமூகத்தில் நிகழும் ஒவ்வொரு அசைவையும் உள்வாங்கி, பின்னர் தன் எழுத்துமூலமாக, அதே சமூகத்தில் அதிர்வலைகளை உண்டு பண்ணும் வகையில் கவிதைகளாகப் பிரசவிக்கிறான். ஜெயக்குமாரின் கவிதைகளில் எப்போதும் ஒரு அறச்சீற்றம் இருக்கும். சமூகம் நோக்கிய கரிசனையும் அதனூடு கலந்திருக்கும். சொற்களை மட்டுமே பின்னிப்பிணைந்து கவிதை செய்யாமல், சமூகப் பயனை முன்னிறுத்திய கவிதைகளே ஜெயக்குமாரின் தனித்துவமாகக் காணமுடிகின்றது. அவரது இந்தக் கவிதைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கவிதைகளில் சில எமது உதயன் பத்திரிகையிலும் பிரசுரமானவை என்பது இன்னும் எமக்கு உவகையளிக்கின்றது. ஜெயக்குமாரின் கவிதைப் பயணம் இன்னும் இன்னும் எத்தனையோ காலங்களுக்கும் தொடரவேண்டுமன்ற எதிர்பார்ப்புகளும், வாழ்த்துகளும்.

**த.பிரபாகரன்**
**பிரதம ஆசிரியர்**
**உதயன் – சஞ்சீவி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் காயங்களாய் விளைந்த என் கவிதைகள்

என் கவிதைகள் கருத்தரித்த தருணங்களைத் திரும்பிப் பார்க்கிறேன்.

- ❖ எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள் ஆனபோதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ உள்ளம் உருகியபோதும் கருகியபோதும் பொருமியபோதும் கவிதைகள் பிறந்தன.
- ❖ எனது அறியாமையை நானே எள்ளி நகையாடியபோது கவிதைகள் பிறந்தன.
- ❖ ஆதிக்குடிகளை ஆதிக்க குடிகள் ஆக்கிரமித்த வரலாறு கண்டு நீதிக் குரலாய் கவிதைகள் பிறந்தன.
- ❖ தாவரத் தங்கங்களின் தலைவர்களாய் கோடரிக் காம்புகள் வலம் வரக்கண்டுகவிதைகள் பிறந்தன.
- ❖ பயிர்களைப் பலியெடுக்கும் வேலிகள் கண்டு, கவிதைகள் பிறந்தன.
- ❖ பூவாகி காயாகி கனியாகும் முன்பே பூமிக்காய் விதையானவித்துக்கள் கண்டு கவிதைகள் பிறந்தன.
- ❖ மனிதப் போலிகள் மாலைகளுடன் பவனிவரக் காணும் போதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ நாக்கிளிப் புழுக்கள் நாகபாம்புகள் ஆனமை கண்டு கவிதைகள் பிறந்தன.
- ❖ பூமிப் பந்தில் காலப் புயல்வீச்சில் கலங்கி நின்றபோதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ கன்னிகள் காணும் அவலங்கள் கண்டு கன்னியாய் வெந்நீர் ஊற்றாய் கொதித்த போதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ ஏக்கங்களும் தாக்கங்களும் தந்த ஊக்கத்தால் கவிதைகள் பிறந்தன.
- ❖ மனக்காயங்களுக்கு மருந்து தேடிய போதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ பாலைவனத்திலே கூட பெற்றோலிய ஊற்றுகளைவைத்த இறைவன் எனக்குள்ளே என்னத்தை வைத்தான்? என எண்ணிய போது கவிதைகள் பிறந்தன.
- ❖ பரீட்சை மண்டபத்தில் விழி பிதுங்கிய போதெல்லாம் கவிதைகள் பிறந்தன.
- ❖ இன்னும் எத்தனை காலமோ? என்ற ஏக்கமும் எழுந்து கவிதை நூலாக உங்கள் கைகளில் தவழுகின்றது.
- ❖ செம்மொழியாம் எம்மொழி வாழ்வு தரும் என்ற நம்பிக்கையும் எழுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கிய முயற்சிக்கு வித்திட்டவர் என் ஆசிரியரான திரு. ந. இரத்தினசிங்கம் ஆவார். யா/ குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் 05இல் பயின்றவாறு மல்லிகை எனும் கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராக்கி களம் அமைத்துத் தந்தார். நான் தொடர்ந்து ஆறாம் தரத்திற்காக யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் இணைந்த போது ஆசிரியராக அமைந்த திரு. தியாகராஜா (அளவெட்டி) இதனை மேலும் ஊக்குவித்தார். இவர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

இந்நூலை கணணி மூலம் தட்டச்சு செய்து தந்தவர் உரும்பிராயைச் சேர்ந்த செல்வி த.துஷ்யா ஆவார். குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்தவர்கள் யாழ் மாருதி பதிப்பகத்தினர். இந்நூலுக்கு முன் அட்டைப் படத்தை வரைந்தவர் எனது நண்பரும், மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலய சித்திர பாட ஆசிரியருமான திரு பா. ரமணாகரன் அவர்கள். இந்நூலிற்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியரான திரு. ந. விஜயசுந்தரம், உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான திரு.த.பிரபாகரன் ஆகியோர்கள் வழங்கியுள்ளனர். நூலாசிரியர் தொடர்பான உரையினை ஓய்வு பெற்ற கோட்ட கல்வி பணிப்பாளர் (உடுவில்) திரு.செ.மோகநாதன் வழங்கியுள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலினை வெளியிட்டு வைத்த உரும்பிராய் ஞானவைரவ சனசமூக நிலையத்தினருக்கும் எனது நன்றிகள்.

இதற்கு மேலாக எனக்கு ஆலோசனை வழங்கியும், எனது நூல்களை கொள்வனவு செய்தும் ஊக்குவித்த அனைவருக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

**கவிஞர்**

**திரு. இரா.ஜெயகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் துளிகளாக..!


| இல | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழே நீ வாழியவே! | 01 |
| 2. | எங்கள் தமிழ் வாழ்க! | 02 |
| 3. | புயலுக்குள் முயலும் நான்! | 03 |
| 4. | அன்னைக்கு அஞ்சலி | 04 |
| 5. | அதிபரோ அதிபர் ! | 05 |
| 6. | ஆரம்ப கல்வி தரும் ஆசான்கள் யோசிக்க...! | 06 - 07 |
| 7. | மணி விழாக் காணுகின்ற மாண்புமிகு அதிபர்களே...! | 08 - 09 |
| 8. | நாவலரே மன்னிப்பீர் ! | 10 - 11 |
| 9. | விலையும் உலையும்! | 12 |
| 10. | பெற்றால் போதுமே பெற்றோல் ! | 13 |
| 11. | பிணம் தின்னும் சாத்திரங்கள் | 14 |
| 12. | உணர்வோடு உழைப்போம் | 15 - 16 |
| 13. | சோதனை காலத்துச் சோதனைகள் | 17 |
| 14. | ஆய கலைகள் பெருக்கி அமுதம் விளைவிப்போம் | 18 |
| 15. | பசியில்லா உலகம் காண.! | 19 |
| 16. | காலத்தை வென்ற கண்ண தாசனுக்கு | 20 |
| 17. | எழுச்சி கொள்! | 21 |
| 18. | கட்டாயக் கல்வியும் கட்டறுத்த மாணவரும்...! | 22 - 23 |
| 19. | பெற்றோல் வதம்! | 24 |
| 20. | தலைமுறைகள் கல்வியினால் தலை நிமிரும் தருணம் இது...! | 25 |
| 21. | பசுவதையைப் பலியெடுப்போம் | 26 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 22. | பாராட்ட மனம் வருமோ? | 27 |
| 23. | நல்லாசான் வாழியவே! | 28 |
| 24. | குருத்துக்களை கருக்கும் போதையைப் பொசுக்குவோம்! | 29 |
| 25. | பதவியை தக்க வைத்தல் பணியாளர் பணியாகும்...! | 30 |
| 26. | பாம்பிற்குப் பாராட்டு...! | 31 |
| 27. | உய்ய வேண்டும் சைவம் | 32 |
| 28. | அந்த மஞ்சள் பென்சில்! | 33 |
| 29. | மீண்டு(ம்) எழ வழி என்ன? | 34 |
| 30. | எரிந்தது தமிழர் நூலகமல்ல! | 35 |
| 31. | கோரோனா காலத்தில் தாதி கோரிய நீதி | 36 - 37 |
| 32. | கல்லூரிக் கனவுகளும் கலையாத நினைவுகளும் | 38 - 39 |
| 33. | மனமே நீ கேளாயோ? | 40 |
| 34. | சூமிற்கு ஆமென்னும் பெற்றோரோ...! | 41 |
| 35. | நீண்ட நடைப்பயணமும் நீங்காத நினைவுகளும் | 42 |
| 36. | .... அரசு செய்தால்! | 43 |
| 37. | காத்திருந்த ஓர் அன்னைக்கு அஞ்சலி! | 44 |
| 38. | மீண்டு(ம்) வரும் மிதிவண்டி | 45 |
| 39. | பாடத் தெரிவும் பட்டபாடும் | 46 - 47 |
| 40. | ஊரெல்லாம் அவள் | 48 - 49 |
| 41. | தப்பிப் பிழைத்தவன் | 50 |
| 42. | சிவபூமி மனவிருத்திப் பள்ளி சிறந்தோங்கி வளர்கவே! | 51 |
| 43. | மதமும் வதமும் | 52 |
| 44. | உலை வைப்பு | 53 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. வீட்டு நெருப்பில் விழுந்த மான்! 54
46. சோப கிருது வருடமும் சோகத்தில் குரங்குகளும்! 55
47. எப்ப வருவான் எமன்? 56
48. ஒட்டு வேட்டி 57
49. அந்நியனின் புத்தகம் 58
50. காதலுக்கு ஒரு கவிதை 59
51. நரியும் நாய்களும் 60 - 61
52. கூசாது பெறுகின்ற ஆசான்கள் சிலருக்காக! 62
53. மடிந்து போன மனித நேயம் 63
54. தூக்கமும் தாக்கமும் 64
55. தாலிகளும் வேலிகளும் 65
56. மனமெங்கும் புழுக்கம் 66
57. நீர் வளம் காப்போம்...! 67
58. நட்புகளும் நற்புகழும் 68
59. நாளைய தலைவர்களுக்காக 69
60. நெஞ்சுக்குள் நஞ்சு புதைத்தோம் 70
61. நாக்கிளிப் புழுக்களை நாக பாம்பு ஆக்காதீர்...! 71
62. இனிக்கின்ற இளமை 72
63. ஐயாயிரம் கடனும் அண்ணனும்...! 73
64. மின்சாரத் தேவதையே...! 74
65. முதுமையில் கல்வி 75
66. வார்த்தைக் குண்டுகள் 76
67. மலர் வளையம் வைக்கும் வரை மலர்செண்டு மன்னர்கள்! 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. உழைக்க நினைத்தவள் 78
69. என் இனிய நண்பன் 79
70. உறவுகள் உயிர்பெற...! 80
71. புணர்வு 81
72. இனிய ஆசானுக்கு இதய அஞ்சலி...! 82
73. அவர் அப்படித்தான் 83
74. கடலோரம் வீசிய காற்று..! 84
75. வாழத் தெரிந்தவர்கள் ! 85
76. தந்திரம் பயில்வோமா? 86
77. கூட்டு நாடகமோ? 87
78. சற்றும் மனம் தளரா பெற்றோல் விக்கிரமன் 88 - 89
79. அந்த ரோக்கின் செல்லாதாம்...! 90 - 91
80. கானமயில் ஐயாவின் கனவுகள் நனவாக ... 92
81. துரைசிங்கப் பெருந்தகையே துயர் தந்து சென்றீரோ? 93
82. இன்னும் எத்தனை காலமோ? 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே நீ வாழியவே!

பண்டைத் தமிழ்ப் புலவோர்
வண்டாகத் தேன் பருகி
கண்ணாகக் காத்தளித்த
கன்னித் தமிழ் வாழியவே!

மூவேந்தர் கொடையாக
பாரெங்கும் பரிமளித்த
மூத்த தாய் மொழியே
முழுமை தந்து வாழியவே!

எட்டாவது செம்மொழியாய்
எத்திக்கும் தித்திக்கும்
வித்தகப் பெருங்கடலே
முத்தமிழே வாழியவே!



கம்பரும் வள்ளுவரும்
இளங்கோவும் பாரதியும்
அமர கவிகள் படைத்த
அருந்தமிழே வாழியவே!

சங்கப் புலவர் முதல்
சமகாலக் கவிஞர் வரை
உயிராகத் தொழுகின்ற
பயிர்த் தொழிலே வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ் வாழ்க!

எத்திக்கும் தித்திக்கும்
எங்கள் தமிழ் வாழ்க!
இயலுமெனமுயலவைக்கும்
இயற்றமிழே நீ வாழ்க!



எங்கெங்கும் இனிக்கின்ற
இசைத் தமிழரே நீ வாழ்க!
நாடெங்கும் நலம் செய்யும்
நாடகத் தமிழ் வாழ்க

காலம் கடந்து வாழும்
கன்னித் தமிழ் வாழ்க!
பண்டைப் புலவர் தந்த
பைந் தமிழே நீ வாழ்க!

உள்ளத்தை உருக்குகின்ற
வெல்லத் தமிழ் வாழ்க!
கடல் கடந்து வியாபிக்கும்
கணனித் தமிழ் வாழ்க

பேச்சாயும் மூச்சாயும்
பெருமைத்தமிழ் வாழ்க!
எட்டாவது செம்மொழியாம்
எங்கள் தமிழ் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலுக்குள் முயலும் நான்!

வந்த வழி மீட்டு
வெந்த பட்டறிவால்
வீழும் போதெல்லாம்
விண்ணுற எழுபவன் நான்!

பனங்காட்டு சலசலப்பில்
பண்பட்ட உணர்வாலே
பணத்துக்கு விலை போகா
மன(னு) நீதி கொண்டவன் நான்!

சாதிக்க முடியாதோர்
சாதிக்கத் துடிப்பவரை
சாவிலும் மன்னிக்கார்
சரித்திரத்தில் அறிந்தவன் நான்!

விமர்சனப் புயல் வந்த
நோக்கத்தை ஆராய்வேன்!
ஆக்க நோக்கமெனில்
அடி பணிவேன்...!
பொறாமைத் தீயெனிலோ
அணைத்திடுவேன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு அஞ்சலி



அன்பான அம்மாவே!
புன்னகை அரசியென
பூரிப்பில் சிரிக்கிறாய்...
புகைப்படமாய்...சுவரில்..!
மண வாழ்வின் மகிழ்வான
ஆரம்பம் அது போலும்!

பொல்லாத ஆஸ்த்மாவும்
போர்காலச் சூழ்நிலையும்
பொருளாதாரத் தடைகளும்
பொறுப்பற்ற என் வாழ்வும்
அப்பரின் அற்ப ஊதியமும்
தந்த வலி தாங்க முடியாமல்
நொந்து தான் போனாயோ?

அரச பணி எனக்கு வர
ஆனந்த பரவசத்தில்
முரசறைந்து திரிந்தாயே!
போர்க்கால இழுத்தடிப்பால்
ஈராண்டுகள் கழிய...
முதல் சம்பளமும் காணாது
முந்தியே போய்விட்டாய்!

அச்சாணி முறிந்த பின்தான்
தவித்தது குடும்பத்தேர்!
ஆண்டுகள் முப்பது அகன்றும்
அன்பாகச் சிரிக்கிறாய் இன்றும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரோ அதிபர்...!

தப்பாமல் பிறந்த மகன்
தப்புகள் செய்கையிலே
தாங்கி நிற்பவர் அதிபர்!

பாக்குண்ணும் மாணவரை
பக்குவமாய் கதைத்து
போக்குத் தடுப்பவர் அதிபர்!

நாடக ஆசிரியர்
வேடங்கள் மாற்றுகையில்
நல்வழிப்படுத்துபவர் அதிபர்!

அரசியல் அடிவருடி
அச்சுறுத்தி நிற்கையிலே
அச்சமின்றி நிற்பவர் அதிபர்!

பயிர்களை மேயும் வேலி
பள்ளிக்கு வருகையிலே
புள்ளி விபரம் தரும் அதிபர்!

தன் ஆசனம் காக்க
சீறி வரும் சிவனாரின்
சீற்றம் தணிப்பவர் அதிபர்!

பணம் என்னும் வலை வீசி
பம்பரம் ஆட்டுவோரை
அறிந்து நழுவும் அதிபர்!

கதிரையே கண்ணானோர்
கருத்தினை தினமறிந்து
பதவியை காப்பவர் அதிபர்!

நலம் காக்கும் சங்கமின்றி
நாளும் வெது வெதும்பி
மெழுகாய் உருகும் அதிபர்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப கல்வி தரும் ஆசான்கள் யோசிக்க...!

உயர்கல்வி என்கின்ற
உன்னத மாளிகையின்
அத்திவாரமாய் அமைவது
ஆரம்பக் கல்வியன்றோ?

எழுத்தை அறிவிக்கும்
இறைவனாய் உங்களையே
ஆன்றோரும் ஏத்தி வைத்தார்!

துடுக்குடனும் மிடுக்குடனும்
துள்ளி வரும் பிள்ளைகளை...
அழுது அடம்பிடித்து
வரமறுக்கும் பிஞ்சுகளை...
வரவழைத்து வரமாகும்
கல்வி தரல் கடமையன்றோ?

சிறுவர் பூங்காவில்
சிறகடித்து மகிழவிட்டு
சீர்கல்வி புகட்டிவரின்
மறுப்பாரோ பள்ளிவர?

வாசிப்பும் எழுத்தும்
வளமான பேச்சும்
தேர்ச்சிகளால் அவரடைய
ஊட்டுதலே முறையன்றோ?

வாட்டும் வறுமையும்
அறியாமை அவலங்களும்
எத்திக்கும் இருப்பதனால்
பசியோடு வரும் பிஞ்சின்
பசி போக்கும் வழிகண்டு
உளமாறக் கற்பித்தல்
நல்லாசான் வழியன்றோ?

நோயாளிக்கே வைத்தியர் போல்
இடர்ப்படுவோர்க்கே நல்லாசான்!
கையெழுத்தை மாற்றினாலே
தலையெழுத்து மாறக் கூடும்!
எழுத்துப் பிழைகளினை
ஏறெடுத்துப் பார்க்காது
சரி போடல் சரிதானோ?
நீங்களே திருத்திவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி போடலும் முறையோ?
மாணவரே திருத்தல்
மாண்பான முறையாகும்!
பரிகாரக் கற்பித்தல்
பரிமாற வேண்டும் தினம்!

நாட்டு நிலைமைகளை
சாட்டாக்கி நழுவாது
விடுமுறைகள் குறைத்து
கடுமையாய் உழைப்பீர்!

முத்தான சித்திரங்கள்
சத்தான கல்வி பெற
நித்தமும் புதுவழிகள்
நீங்களே ஆய்ந்தறிவீர்!

பதவிகளில் இருப்பவர்கள்
ஆரம்பக் கல்விக்காய்
பயிற்சி பெறாதவரை
ஆசானாய் அமர்த்தல்
ஆகாதே இனிமேலும்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழாக் காணுகின்ற
# மாண்புமிகு அதிபர்களே...!

எத்தனை சவால்களை
எதிர் கொண்டு மீண்டிருப்பீர்?
எண்ணிப் பார்க்கையிலே
எம் உள்ளம் வியக்கிறது!

அண்ணன் எப்போ சாவான்?
திண்ணை எப்போ காலியாகும் என
பக்கத்துக் கொக்கு பார்த்திருப்பான்
பருவத்தே குழி பறிக்கக் காத்திருப்பான்!

பதிவேட்டுச் சொத்துக்களை
கொள்ளையிட வட்டமிடும்
கழுகுகள் கண் வைத்திருக்கும் !
காலம் கனிந்துவரக்
கைவரிசை காட்டிவிடும் !

காவல் நிலையம் சென்று
காத்திருந்து தவம் செய்து
சந்தேகப் பார்வைகளில்
சங்கடங்கள் சமாளித்து
சந்தோச முகம் தந்தீர் !

கண்ணிய சேவையிலே
கறுப்பாடாய் வந்த ஆசான்
பொறுப்பின்றி நடக்கையிலே
அத்தனையும் எதிர்கொண்டு
நித்தியகண்டம் பூரண ஆயுசாய்
நீண்ட நற்பணிகள் செய்தீரே !

பிள்ளை வளர்ப்பறியா
முள்ளான பெற்றோர்கள்
முழுப் பகையைக் கக்குகையில்
உள்ளம் வேகாது
உவந்து புன்னகைத்து
தவப் பணிகள் பல செய்தீர் !

கள்ளனைப் பிடிக்கவரும்
கண்ணிய வீரர் போல்
உள் நுழைந்து வந்தாரே
உலக உணவுத் திட்டத்தார் !
உள்ளம் வெகுளாமல்
உள்ள நிலைவிளக்கி
வல்லவரை அனுப்பி வைத்தீர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சுழிகள் வரும்
அழிக்கும் கொவிட்டும் வரும்
பெற்றோல் வதம் செய்யும்
பெரும் குண்டு வெடிப்பும் வரும்
ஏவுகணை வேகத்தில்
ஏறிவரும் விலைவாசி...!
எத்தனை சவால்களினை
எதிர் கொண்டு மீண்டீரோ !

பட்ட காயங்கள் பலவேயானாலும்
பதவியினைத் தக்கவைக்கும்
வித்தையினை புரிந்து கொண்டு
மணிவிழாக் காணுகின்றீர் !
புல்லாகிப் பூடாய்
புழுவாய் மரமாகி
பல் விருகமாகி
பறவையாய் பாம்பாகி
அதிபருமாகி அத்தனையும்
கண்டவரே
இனியொரு பிறவியில்லை
இன்புற்று வாழியவே !




(2023.03.12 அன்று கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள் நால்வருக்கான சேவை நயப்பு விழாவில் வாசிக்கப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரே மன்னிப்பீர் !



அன்னியமதம் வந்து
அடையாளம் சிதைக்கையிலே
நல்வாழ்வைத் துறந்திங்கு
நம் மதம் காத்தவரே !

இராஜ ராஜ சோழனவன்
நம்பி வழி தந்திட்ட
நம் சமயச் செல்வங்கள்
நம்மவர் படிக்கவென
அச்சுப் பொறிகொண்டு வந்து
அச்சம் தவிர்த்தீரே !
சிம்மக் குரலாலே
சிறப்பான பிரசங்கம்
சைவத் தமிழ் காக்கச்
சகமெங்கும் செய்தீரே !

கஞ்சித் தொட்டி வைத்து
கல்விக் கண் கொடுத்தீரே !
பிடியரிசி பெற்றே நீர்
பிரியமுற உணவளித்தீர் !
தரமான தமிழாலே
உரமான உரைநடைகள்
வருங்கால மாணவர்க்காய்
வகுத்தளித்தீர் பெருமானே !

இன்றிங்கு வந்தீரேல்
இதயம் தான் நிற்காதோ ?
மன்றுவரை வழக்குகளில்
மன்னவரே செல்வீரோ ?
சுவாமி காவுதற்கோ
கூலிக்கும் ஆளில்லை
ஆலயத்தில் வழிபடவே
ஆருக்கும் நேரமில்லை !

முழுப்பாவாடை சட்டை
முழுமை தரும் சேலைகள் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்து விற்கும் பாவாடை
கிளுகிளுப்பை ஊட்டுதையா !
வேட்டி கட்டும் விழுமியமோ
வேடிக்கையாய் மாறிவர
முக்கால் காற்சட்டை
முழு இடமும் ஆளுதையா !

வேலி ஓரங்களில்
கோயில்கள் முளைக்கையிலே
அரச மரந் தோறும்
போதி மகான் குந்துகிறார் !

பாவாடை தரித்திட்ட
பாவியர்கள் இங்குவந்து
பசியினையே முதலாக்கி
வாழும் மதம் மாற்றுகிறார் !

மாட்டைத் தின்னுகிற
மாடர்களும் இங்குவந்து
சேட்டை புரிகின்றார் !
கேட்டால் சகிப்பீரோ ?

உமக்குத் தான் விழாவெடுக்க
ஊருக்குள் ஆருண்டு ?
நமக்கிப்போ நேரமில்லை !
நாவலரே மன்னிப்பீர் !

(2019 இந்துத் தமிழ் குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலையும் உலையும்...!

ஆசிய அதிசயமாம்
கடன் சூழ் தீவினிலே
மலையேறும் விலை கண்டு
மலைக்குமே மனமெங்கும்...!

அழுகின்ற பிள்ளைகளை
ஆறுதல் படுத்துதற்கோ
பால்மா இல்லையென்று
பரிதவிக்கும் பெற்றோர்கள் !

பெற்றோலும் டீசலும்
பெறுதலே கடனென்று
தெருவோரம் தவம் செய்யும்
வாகனப் பேரணிகள் !

அச்சுப் பொறியாலே
அடுத்த சம்பளத்தை
எடுக்க வழியுண்டோ ?
அச்சத்தில் ஊழியர்கள் !

பட்டினிச் சாவுகள்
பரிதவிக்க வருமென்று
கட்டியம் கூறியிங்கு
கலைக்கும் கல்விமான்கள் !

பச்சை உடையார்கள்
இச்சையுடன் காத்திருக்க
சாகுமோ குடியாட்சி ?
வேக வைக்கும் வேதனைகள் !

இலங்கைப் புழவிங்கு
இலைக்கின்றித் தவிக்கையிலே
வானெங்கும் வட்டமிடும்
வல்லரசுக் கழுகுகளே...!

மதம் பிடித்த மண்ணிலே
மார்க்கம் புரியாமல்
மனமெல்லாம் ஏக்கத்திலே
வருங்கால வாழ்விற்காய்...!



(தேசிய இலக்கிய விழா 2022- கலாசார திணைக்களம் வலிகிழக்கு பிரதேச செயலகம் திறந்த போட்டி 2ம் இடம் பெற்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் போதுமே பெற்றோல் !

பெற்றோர் தவமிருந்து
பெற்றதாய் சொன்னதன்று !
பெற்றோலுக்காய் தினமும்
தவமிருக்கிறேன் இன்று

குறைப்பதாய் சொன்ன மகான்
குணத்தைக் காட்டி விட்டான்
விற்கிற சிங்கங்களோ
வில்லங்கம் தருகுது பார் !



விலை உயரக் காத்திருந்த
நிலவரைப் பெற்றோரோ
உலை வைக்கும் விலை கண்டு
உள்ளிருந்து ஊற்றெடுக்கும் !

நகரும் பேரணியில்
நாளும் பேரவலம் !
தகரும் வாழ்வாலே
தவிக்குதே மனமெங்கும் !

(2022.05.29 வலம்புரி – சங்குநாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணம் தின்னும் சாத்திரங்கள்

விண் தொடும் விலைவாசி
மண்ணாக்கும் மானிடத்தை...!
ஒரு வேளை உணவும்
ஏழைக்குக் கனவாகும் !
போதைப் பொருள் பெருகி
பொசுக்கும் எம் பிஞ்சுகளை !
எரிபொருள் வரம் வேண்டி
எப்போதும் தவமிருப்பு !
கொள்ளைகள் கொலைகள்
கொடிகட்டிப் பறக்கும் !
இலஞ்சமும் ஊழல்களும்
பஞ்சமின்றிப் பவனி வரும் !
சட்டத்தின் வலை அறுத்து
சதிகாரர் வெளி வருவர் !
வேலிகள் பயிரை மேயும் !
தாலிகள் கொள்ளை போகும் !
அச்சுப் பொறியாலே
பணியாளர் பணம் பெறுவர் !
ஆசியாவின் பரிதாபம்
அந்தரிக்கும் கடனாலே !



(2022.06.19 உதயன் வார மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வோடு உழைப்போம்

தமிழும் சைவமும் தரணியில் தழைக்க
வீரத்தாலே விலங்குகள் உடைத்த
நந்தமிழ் மன்னர் நற்பணியாலே
அந்தமில் புகழுடன் அன்று வாழ்ந்தோம் !

சங்கிலி மன்னனால் எம் கிலி மறந்தோம்
எல்லாளனாலே எல்லாமே பெற்றோம்
வீடுகள் தோறும் விருதுகள் படைத்து
விலங்குகளுக்கும் விலங்குகள் அறுத்தோம்

சுமைதாங்கி அமைத்து சுகம் பெறவைத்தோம்
கால்நடைகளுக்கும் தொட்டிகள் வைத்தோம்
வீரத் தமிழ் மன்னர் விழுதுகளாக
பழுதிலாக் கலைகள் பண்டே வளர்த்தோம்

ஆயுத பலத்தால் ஆதிக்கம் பெற்றவர்
ஐரோப்பியர் காலடிபட்டு
தமிழும் சமயமும் தரமிழந்திடவே
எங்களின் வேர்களை நாமே அறுத்தோம் !
கறை மனம் கொண்ட அந்நியரிங்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையை எங்கோ எடுத்துச் செல்லவே
நிலத்தை மொழியை நீதியை இழந்தோம்
பலத்தையுமிழந்து பாரினில் தவிக்கிறோம்

இருப்பவை அனைத்தும் இழந்த போதிலும்
உருப்பட வைக்கும் உணர்வை இழந்திடோம்
நம்பிக்கை ஒளியை நாளை பாய்ச்சுவோம்
நந்தமிழ் வாழ நன்மைகள் செய்வோம்



வலிதெற்கு பிரதேச செயலக கலாசாரபேரவையின்
கலைநலம் (2018) சஞ்சிகையில் வெளிவந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை காலத்துச் சோதனைகள்

உள்ளதெல்லாம் அள்ளுகிற
கள்ள மனிதரிடை
குள்ள மனிதரும் வந்துவிட்டார் !
குழப்பத்தை ஏற்படுத்த
இனியா பஞ்சம்?
கேட்கும் உரிமைகளை
போட்டு இழுத்தடிக்க
வாட்டும் வாள் வெட்டு !
மீண்டு எழக் கற்பவர்க்கு
மிரட்டும் மின் வெட்டு !
நூலகத்தைப் பொசுக்கியும்
தரப்படுத்தித் தாழ்த்தியும்
கொத்தாய்க் கொன்றொழித்தும்
உரம் குன்றா மாணவரை
பரீட்சையிலே பழுதாக்க
கயமைகள் தரும் தடையோ?



(2018.08.12 உதயன் சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய கலைகள் பெருக்கி அமுதம் விளைவிப்போம்

மங்கள தமிழர் வாழ்வில்
மண்ணிலே மனம் பரப்ப
கண்களாய் கலைகள் காத்து
விண்ணையும் விஞ்சி நிற்போம்!

எங்கள் தமிழ்க் கவிஞர்
ஏற்றங்கள் காண்பதற்கு
ஏற்ற வழி சமைக்க
ஏணியாய் நின்றிடுவோம்!

தொலைக்காட்சி தொலைபேசி
தொலைக்கின்ற வாழ்வுதனை
கலைக் காக்கி காணிக்கையாய்
நிலைகாத்து நிமிர்வோமே!

பரத நாட்டியத்தை
பாரெங்கும் பருக செய்து
ஓவியமும் நாடகமும்
ஓங்கிட விதி செய்வோம்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியில்லா உலகம் காண....!

விண் வெளியில் கொடி நாட்ட
கண் மூடித்தனமாக
பணத்தை இறைக்கின்ற
வல்லரசுப் பூதங்கள்!

சாம்பல் மேடுகளில்
வெற்றித் திலகமிட
போராயுதம் குவிக்கும்
பேரரசுக் கனவுகள்!

இருண்ட உலகத்தில்
வயிற்றோடு போராடும்
வறுமைக் குருத்துகளின்
நலிந்த கோலங்கள்!



மிச்சமென வீசுகிற
எச்சில் உணவு பெற
நாய்களுடன் போராடும்
நலிந்த பிஞ்சுகள்!

தினங்களை கொண்டாடும்
தினவெடுத்த தேசங்கள்
மனங்களின் ரணங்களை
குணமாக்க வர(ம்) வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற கண்ணதாசனுக்கு

சிறு கூடற்பட்டியிலே
சிறகடித்த கவிக்குயிலே..!
சினிமாத் திரையரங்கால்
கண்டெடுத்த 'முத்து'ஐயா!

எட்டாம் வகுப்போடு
எட்டாது போன பள்ளி...!
எடுத்தாய்ந்த ஏடுகளால்
எட்டாத புகழ் பெற்றாய்!

தொன்மை இலக்கியத்தில்
தொடர்ந்து சுழியோடி
திரட்டிய முத்துகளை
தித்திக்கத் தந்தாயே!

'கலங்காதே மனமே'முதல்
'கண்ணே கலைமானே' வரை
சிந்திய இசை விருந்து
சிக்கலில் தினம் மருந்து!

பதிப்புகள் பல கண்ட
அர்த்தமுள்ள இந்து மதம்
பாதிப்புகழ் தந்து
வர்த்தக சிகரம் தொடும்!

வாலிப (ய) குழப்பங்கள்
வந்து வந்து போனாலும்
மயக்கத்தை கலக்கத்தை
பாட்டாக்கி வென்று விட்டாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி கொள்!

வலிகள் சுமந்து வதங்கிய இனத்தில்
வலிமை பெருக்கி வதங்கள் புரிந்திடு
உரிமைக் குரலை உயர்த்தி ஒலிக்க
வரிந்து கட்டியே வந்திடு புயலே!

தன்னலமற்ற தலைவர்களாலே
எம்மினம் தழைக்கும் என்றறிவாயே
சரித்திர நோக்கும் சாணக்கியமும்
ஆளுமை வீச்சும் அணிகலனாக்கு

வசதிகள் தேடும் வாழ்வைவிலக்கு
கடமைகள் வழியே கவனம் செலுத்து
சைவமும் தமிழும் சகத்தில் செழிக்க
உன் பணியிங்கு விதைத்திடு!

துணிவின் ஒளியால் துயரம் விரட்டு
பணிவு கொண்டே பணிகள் பரப்பு
உலவும் புயலாய் உலகில் விரைந்திடு
வெல்ல மொழியால் வெல்ல முனைந்திடு



ஐக்கிய வழியே ஆற்றல் பெருக்கிடு
ஊற்றென நாளும் உயிர்த்தெழு
சோம்பல் களிம்பை சேரவிடாது
ஓங்கியே உன் புகழ் நிறுத்து!

(கோப்பாய் பிரதேசபண்பாட்டுப் பேரவையால் வெளிடப்பட்ட செம்புலம்-3)
சஞ்சிகையில் (2019/2020) வெளிவந்த கவிதை கலாசாரத் திணைக்களத்தால்
நடாத்தப்பட்ட இலக்கிய போட்டியில் பிரதேச மட்டத்தில் முதலிடம் பெற்ற கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயக் கல்வியும்
# கட்டறுத்த மாணவரும்...!

கட்டாயக் கல்வியெனும்
சட்டத்தை நிலைநிறுத்த
கட்டறுத்த மாணவரை
காணத் துடிக்கின்றோம்!

தொடர்பிழந்து போய்விட்ட
தொலைபேசி இலக்கங்கள்
ஊர்ப் பெயரே முகவரியாய்...
வலைவீச வழியேது?

சாதாரண தரப் பரீட்சை!
சாதிக்க வேண்டியபெண்
சந்திக்க வருகின்றாள்
கையிலே 'சிசு'வுடனே!

பள்ளிப் படிப்புக்கே
கொள்ளி வைத்த ஆண்கள்
உழைப்பின் ருசிகண்டு
திசைமாறிப் போகின்றார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரநோக்கில்லாத
துயரப் பெற்றோர்கள்
பணங்கறக்க வென்றே
படிப்பை நிறுத்துவிப்பார்...!

கொரோனா தேவதையின்
கோதாரி இடைவெளியால்
முத்தான கல்வியின்றி
வித்துகள் வெம்புதையா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் வதம்!

பதினாறும் பெற்றாலும்
பயணிக்கப் பெற்றோலை
தவிர்க்க முடியாமையால்
தவிக்கிறோம் நாமின்று!

உழக்கிலும் உயர்த்திவிடும்
மிதிவண்டிதனை மறந்து
புது வண்டி பலநாடி
மதிமயங்கி வேகின்றோம்!

பெற்றோல் தங்கமிங்கு
பெறுவதோ கானலாய்...
காலமெலாம் பேரணியாய்
காத்திருப்பில் கழிகிறதே...!

மனிதக் கழுகுகள்
மலிந்த பூமியிலே
மலினப் படுகின்றார்....
மங்கையர்கள் நோக்கிலுக்காய்!

தூரப் பயணமோ
துயரப் பயணமாய்...!
முடங்கிப் போகுது நாடு..!
அடங்கிப் போகுது வாழ்வு..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறைகள் கல்வியினால் தலை நிமிரும் தருணம் இது...!

தொழில் வழி தோன்றிய
சாதியெனும் சாக்கடையில்
நீதி இழந்த வர்க்கம்
நிமிரும் தருணம் இது!

சீவல் தொழிலாலே
சீவித்த பரம்பரையில்
பட்ட தாரிப் பிள்ளைகள்
பார்க்கிறார் அரசபணி!

சிகை அலங்காரத்தாலே
சீவித்த தலை முறையில்
வைத்தியர்கள் உருவாகி
வருங்காலம் மாற்றுகிறார்

குடிபோதைக் கணவனாலே
குடி முழுகிப் போன அன்னை
படித்து வந்த பிள்ளையினால்
பார் போற்ற நடக்கின்றார்

ஆதலினால் பெற்றோரே
அருங்கல்வி ஏணியினால்
தலைமுறைகள் தலை நிமிர
தளராது வழி செய்வீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவதையைப் பலியெடுப்போம்



உழவரின் தோழரென
உதவும் எருதுகளை
கொல்ல வரும் கொடியோரை
வெல்லவொரு வழி பார்ப்போம்!

கொசுவைக் கொல்வது போல்
பசுவைப் பலியெடுக்கும்
பாதகம் தடுத்திடுவோம்
பாவத்தை விலக்கிடுவோம்!

மாட்டுப் பொங்கலென
மாலையிட்டுப் போற்றி விட்டு
வெட்டி வீழ்த்துவதோ?
வேட்டை ஆடுவதோ?

பாலூட்டும் தாய் போல
பணி செய்யும் பசுமாட்டை
கோமாதா என்றேத்தி
கோயிலென வழிபடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்ட மனம் வருமோ?

நல்லவற்றையே தேடிப்
பாராட்டும் மனமிருந்தால்
நன்மைகள் பெருகி
நம்மினம் சிறக்காதோ?

இலைமறை காய்களென
திறமைகளைப் புதைத்தோர்
பாராட்டால் பட்டை தீட்டின்
பார்போற்ற உயர்வாரே!

மக்கள் நலம் நாடி
மகத்தான பணி செய்வோர்
உவப்பான பாராட்டால்
ஊக்கமுடன் உழைப்பாரே!

தவறுகள் தேடித்
தண்டிக்கத் துடிப்போர்கள்
நல்லவற்றைப் பாராட்டின்
கயமைகள் கழிந்திடுமே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசான் வாழியவே!

அடுத்த தலைமுறையை
அவனிக்கு வடிவமைக்க
தன்னையே மெழுகாக்கும்
தகும் ஆசான் வாழியவே!

தமிழர் தொன்மையினை
தரணியிலே நிலைநிறுத்த
தளரா மனங்கொண்ட
தமிழாசான் வாழியவே!

கயமைகளே மலிந்திருக்கும்
கலவர பூமியிலே
கடமைகளை உணர்த்துகின்ற
கண்ணியவான் வாழியவே!

பண்பாட்டு விழுமியங்கள்
பன்னாட்டார் வீழ்த்தாமல்
முன் மாதிரியாய் புகட்டும்
நல்லாசான் வாழியவே!

மாறி வரும் உலகில்
ஆர்வமுடன் புத்தறிவை
ஆராய்ந்து கற்கத் தூண்டும்
அரும் ஆசான் வாழியவே!

மாணவர் நலன்களையே
மனத்திலே நிலை நிறுத்தி
வாழ்நாள் கல்வி கற்கும்
வல்லாசான் வாழியவே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துக்களை கருக்கும் போதையைப் பொசுக்குவோம்!

போதையின் உபாதையினால்
பாதை தவற வைக்கும்
பாதகச் சதி அறிந்து
பாவம் விலக்கிடுவோம்

பச்சைப் புழுக்களிங்கு
பயிர்களைப் பழுதாக்க
கங்கணம் கட்டி நிற்க
கண் கொண்டு காப்போமா?



மீண்டும் நிமிராத
மூடமான இனமாக்கி
மாண்டு போக வைக்க
தூண்டுவதைத் தடுப்போமா?

பணத்திற்காய் பிணமாக்கும்
கோடரிக் காம்புகளை
இனத்துக்குள் இனங்கண்டு
தலைமுறைத் தளிர் காப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியைத் தக்க வைத்தல் பணியாளர் பணியாகும்...!

மதம் பிடித்து மானிடத்தை
பதம் பார்க்கும் தேசத்தில்
பதவியைத் தக்க வைத்தல்
பணியாளர் பணியாகும்!

கட்சி நலன் காத்திடவே
கட்டளைகள் இடுவோர் பின்
பொம்மையாய் ஆடி நிற்கும்
உண்மையற்ற கல்வி மனம்

வலியது வாழுமென்ற
வாக்கு நிலை பெறவே
நீதி தேவதையும்
நீலிக் கண்ணீர் சிந்தும்!

நாணயம் அற்றவர்கள்
நாடெங்கும் வழி நடத்த
சங்கத்தில் குளிர் காய
சம்பள மனம் நாடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பிற்குப் பாராட்டு...!

ஊருக்குள் நுழைந்தது
அழகான கருநாகம்!
பரம சிவன் கழுத்தமர்ந்து
பதவி பெற்று வந்ததால்
பாராட்டு விழாவொன்றை
பாம்பும் வேண்டியது !



பயந்த பிராணிகளோ
விழா ஒழுங்கு செய்தன!
வழமை போல் தலைமைக்கு
வந்தது பச்சோந்தி!
வரவேற்புரை தன்னை
வல்லூறு நிகழ்த்தியது!
குள்ள நரி வந்து
உள்ளம் நெகிழ்ந்து போய்
வாழ்த்துப் பா வழங்கியது!
மாரித் தவளையொன்று
மகிழ்ந்து கூடத்தாடி
செய்திகள் சேர்த்தது!
செம்புலத்தில் திரண்ட
செம்மறி ஆடுகளோ
கைதட்டி மகிழ்ந்தன!
சிறுத்தைகள் வராது போனதால்
சிறப்பாய் முடிந்தது இவ்விழா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உய்ய வேண்டும் சைவம்

சிவ பூமி எங்கும்
சைவம் தழைக்க
ஏழைச் சைவர்களை
ஏற்றம் பெற வைப்போம்!

அற நெறிப் பள்ளிகளை
ஆலயங்களில் அமைத்து
வலிந்தேனும் வரவழைத்து...
பசி நீக்கிப் படிப்பிப்போம்!

மகோற்சவ காலத்தில்
மாணவர்க்கும் போட்டிகளை
பாங்காக நடத்தியே
பரிசுகள் வழங்குவோம்!



பரிபாலன சபையில்
பண்பட்ட சீலர்கள்
பணி செய்ய வந்தாலே
நம்பிக்கை வளராதோ?

வர்ண பேதங்களை
வாழ்விலே நீக்கிவிட்டு
மனிதராய் அரவணைப்பின்
மத மாற்றம் சாத்தியமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மஞ்சள் பென்சில்...!

குமாரவேலர் மகன்
குமாரைக் காணுகையில்
குறும்புக் குதுகாலமும்....!
நினைவுப் புறவை
சிறகடித்துப் பிறக்கும்!
எங்கே அந்த மஞ்சள் பென்சில்?
எப்போது தருவாய்?
அன்பொழுகக் கேட்பேன்!
'பிறகு தாறேன்'
பிரியமுடன் பிரிவான்!
அவனைக் கவனிக்காவிடின்
அவனே தொடங்குவான்!
'அந்த மஞ்சள் பென்சில்....?
"ஆமாம் ... எப்போ தருவாய்?"
'பிறகு தாறேன்'



சிரித்தபடி கடப்பான்!
முதலாம் வகுப்பினிலே
கொடுத்த பென்சில் அது!
பள்ளி யருகிலுள்ள
அரச மரத்தடியில்
இருவரும் கண்டெடுத்த
சுட்டுவிரலளவு
மஞ்சள் பென்சில் தான்!
ஐம்பது ஆண்டுகள்
கழிந்த போதிலும்
பசுமையான நினைவுகளின்
பதிந்த குறியீடாய்
அந்த மஞ்சள் பென்சில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டு(ம்) எழ வழி என்ன?

தமிழினம் தலையெடுக்காது
தடுக்கும் உபாயமென
மாணவரைக் குறி வைத்து
பரப்புகிறார் போதைப் பொருள்!

நிஜாம் பாக்கு வசமாக்கி
மாவா, சாதா பாக்காகி
கஞ்சா, ஹெரோயினுக்காய்
கெஞ்ச வழி வகுப்பர்!

சோர்ந்து படுத்திருப்பர்
மெலிந்து நிறை குறைவர்
கன்னங்கள் உப்பிப்போய்
கழுத்தெலும்பு காட்டி நிற்பர்

பள்ளியால் துரத்தலாமோ?
வீட்டுக்குள் பூட்டலாமோ?
காக்கியுடைக் கரங்களிடம்
கை கழுவிக் கொடுக்கலாமோ?

போதைப் பொருள் விற்று
பொருள் தேடும் பிசாசுகளை
வாதத்தால் தப்ப வைப்போர்
வாழும் வரை தொடரும்!

பள்ளிப்பொதி சோதித்து
பாசமெனும் விலங்கிட்டு
குடும்ப உணர்வாலே
விடுவித்தலே வழியாகும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்தது தமிழர் நூலகமல்ல...!

எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
அந்நியர் ஆட்சியிலும்
அவனியிலே நிமிர்ந்ததனால்
புகைந்த நெருப்பு!

எரிந்தது தமிழர் நூலகமல்ல...!
தமிழ்ப் பெரு விருட்சத்தின்
உரிமைக்கு உயிரூட்டும்
தொன்மை மிகு வேர்கள்!



எரிந்தது தமிழர் நூலகமல்ல!
கல்வி மலைச் சிகரத்தில்
கலைகள் பல வளர்த்த
தமிழர் தம் ஏணிகளே!



எரிந்தது தமிழர் நூலகமல்ல!
பஞ்ச சீலக் கொள்கையை
பாருக்கே படைத்தளித்த
போதி மாதவன் போதனைகளே

(யாழ் பொது நூலகம் 1981.06.01இல் எரிக்கப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரோனா காலத்தில் தாதி கோரிய நீதி!

சுக நல வாசிகளே!
சுய நலச் சூரர்களே!
தாதியென் புலம்பலினை
தயவோடு கேளீரோ?

இறைச்சி மீன் காய்கறிக்காய்
ஈக்களாய் மொய்க்கின்றீர்
உண்ணவே பிறந்தீரோ?
உயிரச்சம் உமக்கில்லையோ?

ஆறு மாதம் கழிந்த பின்னும்
அலைவயிருக்கும் சந்தையிலே
அறுசுவையாய் உண்பதற்கு
அவனியில் நீர் இருப்பீரோ?

வயிறார உண்ணவே
வடிவெடுத்த வல்லவரே
குளிர் சாதனப் பெட்டியிலே
குவித்தே நீர் உண்பீரே!

ஆளமட்டும் மறைத்துவிட்டு
ஆலப்பத்திரி வருவீர் நீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான தனித்தாதி தனிப்படுக்கையுடன்
உயிர் பிடிக்க ஒட்சிசனும் கேட்டிடுவீர்!

சாகாவரம் பெற்றோ
தாதியர் நாம் இங்குவந்தோம்?
தாயாய் தங்கையாய் தாரமாய்
தாதியர் இருந்தாலே உணர்வீரோ?

ஆடைமேல் ஆடைகளாய்
கவசங்கள் பல போர்த்து
அத்தனையும் அடக்கி வைத்தே
அல்லல் படுகின்றோம்!

அலையலையாய் கொரோனா
காவு கொள்ள வருகையிலே
வீட்டு விழாக்களை
விலக்கி வைக்க மாட்டீரோ?

தினம் பத்து மரணங்களால்
திகைத்து வேகின்றோம்
பொறுப்புள்ள மக்களென
பொது நலம் காப்பீரோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கனவுகளும் கலையாத நினைவுகளும்



அம்பனை வயலோரம் - ஓர்
அழகுக் கல்லூரி...!
தரமாறில் சேர்ந்ததனை
தாவும் மனம் நினைக்கிறது!

அரச பேரூந்தில்
அள்ளித் திணித்ததனால்
உரசப்பட்டு வந்ததனை
உள்ளம் நினைக்கிறது!

தட்டிவான் கதவினிலே
தொங்குமான்களாய் தொற்றி

துள்ளி வந்த இன்பத்தில்
துன்பம் பறக்கிறது!

பத்தை வயிரவரைப்
பார்க்கவென படையணியாய்
வயல் வரம்பில் நடந்த
வாழ்வில் குதிக்கிறது

ஆராய்ந்து கண்டு கொண்ட
ஏற்றதோர் நண்பனுடன்
துர்க்காவில் படம் பார்த்த
துணிச்சலை வியக்கிறது!

மிதிவண்டி மீதேறி
கல்லூரிக் கரை தாண்டி
கீரிமலைக் கேணியில்
குளித்ததிலே களிக்கிறது!

மாவிட்ட புரத்தினிலே
மகாஜனத் திருவிழாவில்
கட்டறுத்துக் கடல்கண்ட
நினைவுகளில் குளிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களில் வானரங்கள்...!
திருக்கேதீஸ்வரப் பயணம்!
பரீட்சை மறந்து பாடியதை
பரிதாபமாகவே பார்க்கிறது.

பருவத் தீ பற்றி
பட்டாம் பூச்சி மனம்
பறந்தே துறந்திட்ட
படிப்புக்காய் துடிக்கிறது

பழரசப் பார்வைகளில்
பரவசப் பட்டதனால்
படிப்பைத் தொலைத்ததை
பாழ் மனம் நினைக்கிறது

ஊறிய கலையுணர்வை
உதறித் தள்ளியதால்
உயிரியலால் வெந்ததனை
உள்ளம் நினைக்கிறது

எத்தனையோ உணர்வுகளை
என்னுள்ளே விதைத்தவளே...
மகாஜன மாதாவே
மாண்புற ஓங்குகவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே நீ கேளாயோ?

ஊக்கம் பெறு மனமே!
தேக்கம் வேண்டாமே
ஆக்கம் வேண்டுமெனில்
அழுதழுது சோராதே!

உந்தன் மொழி கேட்டு
உணர்ச்சிப் பிளம்பாக
வாழ்ந்து கண்ட தென்ன?
வாட்டும் தோல்விகளே!

வந்த பாதையினை
வழி கட்டிக் கற்றுக் கொள்!
அனுபவ ஞானத்தால்
அனைத்தையும் வென்று விடு



சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளால்
தாழ்ந்து நிலை தளராதே!
அறிவின் வழி சென்று
பொறிகளை வென்றுவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூமிற்கு ஆமென்னும் பெற்றோரே...!

கொரோனா இடர்காத்து
குன்றாத கல்வி பெற
சூமிற்கு ஆமென்னும்
எம் பெற்றோரே எச்சரிக்கை!

இணைய வழிக்கல்வி
இணையும் வழியெனக் கருதி
பாசாங்கு பண்ணியே
பாழாக்குவார் வாழ்வை!

நோக்கம் தவறிய
இயல்பூக்கத் தேடலினால்
பிஞ்சிலே பழுத்துவிடும்
குஞ்சுகள் கவனிப்பின்றேல்!

சூம் கல்வி கற்கையிலே
சூழ்ந்திருப்பீர் அருகே!
அமைதியாய் கவனித்து
அல்லல் தவிர்த்திடுவீர்

சூம் கல்விக் கென்று
சிம் அட்டை வாங்குகையில்
உம் பெயரில் பதிந்தாலோ
இணைப் பெடுக்க வழியுண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட நடைப்பயணமும்
# நீங்காத நினைவுகளும்

அன்றைய மேய்ப்பர்கள்
அதிரடியாய் அறிவித்தார்
பச்சைமயமாகும்
யாழ்ப்பாணம் நாளையென்று...!

'ஆதலினால் அன்புடையீர்
இரவு பத்து முன்னர்
இங்கிருந்து புறப்படுவீர்
கையில் கிடைத்ததுடன்
கைதடி கடந்திடுவீர்'!

சிறுநதிகள் போல் வந்து
பெருநதியாய் திரண்டு
நடையணியாய் நகர்ந்தது...!
பெருமை மிகு யாழ்ப்பாணம்!

வான் மழை வருத்துகையில்
வரும் செல் மழை அதிர...
பலாலியில் கிளம்பும்
பராலைற்றுக்கள் மிரட்ட...
கையிலே கிடைத்திட்ட
காகித சான்றிதழ்கள்...
நாய், பூனை, கோழிகளை...
நாம் வளர்த்த மந்தைகளை...
நலம் காக்க வழியின்றி

வலிகாமம் கடந்தோம்
வலிகள் சுமந்தபடி...!

நீண்ட இரவொன்று
மாண்டு மடிந்திடவே
பகைவனாய் வந்தது பகல்!
கடைகள் யாவும்
காலியாய் கிடந்தன...
பசித்த எம் வயிறுகள் போல...!

தாகத்தால் தவிக்கையில்
தண்ணீர் தந்திடவும்
தயங்கினர் அயலோர்
முடிவுற்ற பேரணி கண்டு...!

தெரிந்த வீடுகளில்
வரிந்து திணித்தோம்
மர நிழல்களே
வரியவர் கூரைகளாய்!
உறவுகளைத் தேடும்
உணர்வுகளின் நெருக்கடி!
எங்கே முடியும்?
எப்படி விடியும் என்று
அங்கலாய்க்கின்றோம்
அன்று முதல் இன்று வரை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …. அரசு செய்தால்!

பால் தேநீர் கனவாகும்!
பாண் மாவும் அரிதாகும்!
பட்டாசுகளாய் மாறி
பலியெடுக்கும் சிலிண்டர்களும்!
கொலைக் குற்றவாளிக்கு
'பதவி' ஒரு பரிசாகும்!
அரசைத் துறந்த மகான்
அரசெங்கும் வந்தமர்வார்
வந்த மகான் வாழவென
சந்தியெங்கும் காவல் நிற்பார்
மண்ணை விழுங்குகின்ற
மார்க்கமே முன் நிற்கும்
விக்கிரகங்கள் மறையும்
உக்கிர இன வாதம்
வக்கிர நிலையெடுக்கம்!
புத்திர நலன் காக்க
புகலிடம் மனம் நாடும்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருந்த ஓர் அன்னைக்கு அஞ்சலி!

அம்மா நீ போய்விட்டாய்!
ஆறாத மனத்தோடு...!
கருவறையில் வந்த செல்வம்
கால் நூற்றாண்டுதனை...
வாழ்வின் வசந்தத்தை...
நான்கு சுவர்களுக்குள்
நழுவிய வாழ்வுதனை...
தாங்காத தாயன்பால்
தகித்துக் கொதித்தவளே!
உன் மகனுக்கு உணவூட்ட...
அவன் மடியில் தலை வைக்க..
கனவுகள் பல கண்டாய்!
கொள்ளி வைப்பானென்று
உள்ளத்தே உருகி நின்றாய்!
எங்கள் தலைவர்கள்
எல்லோரும் தூக்கத்தில்..!
இனவாதக் குதிரையிலே..!
இணைந்த சவாரியிலே...!
உன் ஆத்மா சாந்தி பெற
உள்ளத்தே உருகுகின்றேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வரும் மிதிவண்டி

ஆண்ட குடும்பங்கள்
ஆனவரை சுருட்டியதால்
மூண்ட நெருக்கடியில்
மீண்டது மிதிவண்டி!

பத்தாயிரம் ரூபாவில்
வித்த மிதிவண்டி
பல்லாயிரம் தாண்டி
வீறுநடை போடுதிங்கே!

கனகாலமாய் இங்கு
கறள் பிடித்துக் கிடக்குதென
இலவசமாய் கொடுத்தவரும்
கலங்கியழும் மிதிவண்டி

காற்றைப் பழுதாக்கும்
கனத்த வாகனங்கள்
போக வழியின்றி நிற்க
வேகம் பெறும் மிதிவண்டி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத் தெரிவும் பட்டபாடும்

அவன் உள்ளம் துள்ளியது
பதினொன்று பாசென்று!
உயர்தரத்தில் கால் பதிக்க
தயாரானது நெஞ்சம்!

எட்டாம் வகுப்போடு
அடுப்படி வந்த அன்னை
'சாஞ்சைப் படி'யென்றாள்...
சங்கடமாய் உச்சரித்து...!

பத்தாண்டு முன் படித்த
பயோக் கொப்பிகள் யாவும்
பாழாகிப் போவதோ?
'பயோபடி' எனும் அக்கா!

ஆட்ஸ் படிக்க நினைத்தால்
அரசுத் தொழில் வருமோ?
ஆர்தான் பெண் கொடுப்பார்?
அந்தரித்தார் அத்தானார்!

ஆத்ம நண்பரும் அங்கு தான்!
ஆசை நாயகியும் அங்கு தான்!
உள்ளே கசியும் கவி மறந்து
அள்ளுப்பட்டான் அங்கே தான்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்ஸ் படிக்க சென்றவரை
அற்பமாய் தினம் பார்த்து
'சயன்ஸ்'எனச் சொல்வதிலே
சந்தோசம் பல கண்டான்!

ஏறிகலைகள் மத்தியிலும்
பட்டணத்து ரியூட்டறியில்!
ரியூட்டறியும் ரியூட்டுகளும்
கரைத்தன செல்வம்!



ஆண்டுகள் இரண்டு தாண்டி
அந்தரித்தான் பள்ளியிலே!
ஏறாத பயோவாலே
நாறினான் நாளெல்லாம்!

பரீட்சையும் வந்தது..
பாய்ந்ததோ கவிதைதான்
பெறுபேறு பறைசாற்ற
வெறுமைத் துயர் வீழ்ந்தான்!

ஆறாம் வருடமதில்
ஆறு கடந்து வந்தான்
ஆதலினால் மாணவரே
உமையறிந்து தெரிவு செய்வீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரெல்லாம் அவள்...

'நம்பி'யவன் நல்லூரில் நங்கையினை
கன்னியாய் காண்கையிலே
கட்டுவன் அவளையென்று
இளவாளைக் கனவினிலே
இதயம் நனைந்தானே !

வடலிஅடைப்பாலே
வதன மதி பூக்கையிலே
நிலாவரையாள் உலாக்கண்டு
அளவெட்டி நடக்கையிலே
அலை பாய்ந்து நின்றானே !

பொன்னாலை கொடி-காமம்
கட்டுடைக்க வேண்டுமென
இடைக்காடு தரிசிக்க...
தண்ணீரூற்றாகத்
தவங்கிடந்து கை(த்)தடியாய்
தளர்ந்தே மெலிந்தானே !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெழுந்த போராளே
உயரப் பறந்தாளே
கிளி நொச்சி மரம்தாண்டி
புத்தூர்க்குப் பறந்ததுவே !

உடையார் கட்டுவதை
உத்தமியாள் விரும்பி
சத்துருக் கொண்டானை
சாகசத்தால் மணந்துவிட்டாள் !

கொக்கு வில்லாய் வளைந்து
கொத்திச் சென்று விட்டாள்
மயிலங்காட்டினை அம்
மன்னனுக்கே காட்டிவிட்டாள்
இவனோ "சாவ" கச்சேரியினை
சந்ததமும் நாடுகிறான்

(2018.12.23 உதயன்– சூரியகாந்தியில் வெளிவந்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிப் பிழைத்தவன்

உக்கிர யுத்தத்தின்
வக்கிர பலியெடுப்பில்
தப்பிப் பிழைத்ததனை
திரும்பிப் பார்க்கின்றேன் !

கூட்டமொன்று நடக்கையிலே
நோட்டமிட்ட "கெலி" யொன்று
வேட்டுகள் தீர்த்திடவே
ஓட்டமிட்டுத் தப்பியதை....

கெலியொன்று கக்கிவிட்ட
கிலியூட்டும் குண்டாலே
அயல் வீட்டுக் குஞ்சுகளோ
அடியோடு சிதறியதை....

நீண்ட நடைப்பெயர்வின் பின்
மீண்டு வருகையிலே
களையெடுப்பு முகாமொன்றில்
அரச பணி அதிட்டத்தால்
ஆருயிர் தப்பியதை...!

(தினகரன் வாரமஞ்சரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி மனவிருத்திப் பள்ளி சிறந்தோங்கி வளர்கவே...!

மந்த புத்தியென்று
அருமந்த பிள்ளைகளை
சுமந்து பெற்றவரே
சுமையெனப் பூட்டிவைக்க...
அண்ணல் திருமுருகன்
அருளாலே வாழவைக்கும்
சிவபூமி மனவிருத்திப்பள்ளி
சீராக நாளும் வளர்கவே !

வந்து பிறந்தாலும்
வாழத் தெரியாதோர்
வெந்து போகாமல்
முந்த வழி தருகவே !

கோண்டாவில் பதியினிலே
கோமான் சிவாஜி அடிக்கல்லிட
செம்மனச் செல்வி தங்கம்மா
திறந்து வைத்த பள்ளி இது !

ஆராதனை அனுதினமும்
தியானம் உடற்பயிற்சி தொடர
ஒலிம்பிக் போட்டிவரை
ஒலித்தது ஒளித்தோர் புகழ் !

தொழிற் பயிற்சி விவசாயம்
எழுச்சிமிகு வாழ்வுதர
ஆண்டுகள் இருபது
நீண்டு நிலைபெற்ற
சிவபூமி மனவிருத்திப்பள்ளி
தாங்குக தங்கமாம் சிறுவர்களை !

(2023.07.16 வலம்புரி சங்கு நாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமும் வதமும்

அபின் மதபோதனையால்
அரசாளும் தேசத்தில்
மனிதம் புனிதம் கெட்டு
மலினப்படும் தினமும்...!

ஆசையினை அறுத்து
அரசைத் துறந்த மகான்
அரசுகள் தேடிக் குந்த
சமரசம் தினம் குலையும்!

இறையின் பெயராலே
கறை படிந்த மனங்களினால்
குண்டுகள் வெடிக்கையிலே
மானிடமே அதிரும்!

'வருகிறார் சீவிக்க'
வாசகம் சொல்லியே
நாளைய தலைவர்களை
மதம் மாற்றிப் பசியாறும்

கடவுளின் பெயராலே
கயமைகள் பிழைத்திடவே
பொறையும் மறையும்
இறையும் உறையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலை வைப்பு

உலை வைக்க வழியற்ற
தாயற்ற பெண்பிள்ளை
தரங் கெட்ட தந்தையினால்
படித்தவர் வீட்டுக்கு
பணி செய்ய வந்தாள்!

பழி கொண்ட நெஞ்சத்தார்
பிழிந்தெடுத்தார் நாளும்...
பேசிய சம்பளமும்
காற்றிலே பறக்கவிட்டு
படியளந்தார் பாரும்...!
உறவுகளுடன் பேசின்
உண்மைகள் கிளம்புமென
குருவான எசமான்கள்
அலைபேசியினை மறைத்தார்!
வீட்டுக்குள் வாட்டினார் !

எத்தனை கயமைகளால்
அச்சிறுமி வந்தாளோ?

கழுத்திலே கயிறுமாட்டி
உயிருக்கே உலை வைத்தாள்!

கற்றபின் நிற்க
அதற்குத் தகவென்ற
வள்ளுவன் ஆவிகூட
விழிநீர் சொரிந்திடுமே
சட்டமெனும் இருட்டறையில்
ஏற்றாதஒளிகண்டு...!



(2022.07.30 தினகரன் வாரமலரில் வெளிவந்தது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு நெருப்பில் விழுந்த மான்...!



கலைமானைப் பிரிந்த
பிணைமான் இனமான்
கண்ணியமாய் கன்றை
காத்து வந்தது!
கட்டில் சுகம் தேடி
கண் வைத்து வந்த
வீட்டுத் தலைமை நரி
பிணைமானைக் குறி வைத்து
பசி தீர்க்கப் பார்த்தது...
விருந்துக்கு வரவழைத்தே
விருந்தாக்கி முடித்தது!
மானின் வயிற்றினிலே
மகவொன்றை உருவாக்கி
கை கழுவி நழுவியது...!
மானத்தால் கலங்கிய மான்
நரி வீட்டு நெருப்பினிலே
கருகி வெந்து போனது!
கன்றையும் தவிக்க விட்டு
சாம்பலாகிப் போனது!
வீட்டுத் தலைமை நரி
நோட்டின் பலம் கொண்டு
கூடு தப்பி வந்தது...!
நாடு பற்றி முழங்கியது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோப கிருது வருடமும்
# சோகத்தில் குரங்குளும் !

சீனத்தார் கேட்டதங்காய்
ஈன இரக்கமின்றி
அனுப்புதலும் மனிச குணமோ?

எங்கடை சந்ததியே
எங்களின் எமனானால்
எங்குதான் போவது இனியே?

மலைநாட்டு மனிசர்களை
உலை வைத்து அனுப்புகையில்
அழுது பார்த்தோமே அன்று!

மனிசருக்கே துரோகமென
கணித்துச் சிரித்தோமே!
குரங்குகள் மீதுமோ குறி?

ஆயிரம் விலங்குகள் தாம்
அணிவகுத்து வந்தாலும்
பரவசம் வருமா பார்க்க?

எங்களின் சேட்டைகளை
எப்படியோ கற்றுவிட்டு
எப்படிச் செய்வீர் துரோகம்?

மரத்துக்கு மரம் தாவி
மகிழ்ந்தது உண்மைதான்!
கட்சிக்குக் கட்சியா தாவினோம்?

உயிரோடு புதைப்பாரோ?
சூப்பாக்கிச் சுவைப்பாரோ?
உயிரச்சம் புரியுது எமக்கும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்ப வருவான் எமன்?

வீட்டில் ஆறி இருந்தாலும்
வெளியே செல்ல நினைத்தாலும்
எப்ப வருவான் எமனென்று
ஏங்கும் உள்ளம் தவிக்கிறது

வீட்டுக்குள்ளே இருந்தாலும்
வேட்டுக்களினைத் தீர்த்தோரால்
போட்ட போதே பொலிவிழந்து
விழுந்த உடல்கள் ஏராளம்!



வீதி மீது ஏறுகையில்
வீதியே சீறி வருவது போல்
விரையும் கனரக வாகனங்கள்
பகையாய் தெரியும் பாதைகளே!

மஞ்சள் கோட்டில் மிதிப்பானோ?
வைத்தியர் வடிவில் வருவானோ?
எப்ப வருவான் எமனென்று
தப்ப நெஞ்சம் தவிக்கிறது.

(2018.09.09 உதயன் சூரியகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டு வேட்டி

வருகுது விழாவொன்று..
வாங்க வேணும் வேட்டியென்று
வடி வேலர் வேண்டுகையில்
வந்த மகன் போதித்தான்!

ஒட்டி உலகோடு உறவாடவே
ஒட்டு வேட்டியே தகுமென்றான்
பட்டு வேட்டிக் கனவொழிந்து
ஒட்டு வேட்டி கனவு கண்டார்!

இரண்டே மடிப்புகளாய்
திரண்டிருந்த வேட்டியினை
ஒரே சுற்றால் சுற்றுகையில்
ஒட்டிக் கொண்டதுவே!

விரைந்து நடக்கையிலே
வீதியில் வீழ்த்தியது!
காலைத் தூக்குகையில்
காட்சி தெரிந்ததுவே!

மோட்டார் சைக்கிளோட
மேவிக் கால்தூக்க
இரண்டாய் பிரிந்தது
இருந்ததும் கெட்டது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியனின் புத்தகம்

உன்னைப் படித்திடவே
உளங்கொண்டு அலைந்ததை
எண்ணிக் கலங்குகிறேன்
கண்ணீர் வடிக்கின்றேன் !

முன் அட்டைக் கவர்ச்சியிலே
என் மனம் தொலைத்தேன்
கனிவான மொழி கண்டு
காதல் வெறி கொண்டேன் !

புரிந்திட முடியாப் புத்தகமாக
பிரிந்து நீ சென்றாலும்
வரிந்து கட்டியுன்னை
வளைத்திடத் துடித்தேன் !

சந்தர்ப்பக் காற்றினிலே
சிக்கிய காகிதமாய்
வந்தவனின் கைகளிலே
வாசிக்கக் கிடைத்தாய் நீ!

வெந்து மனம் வாடினுமே
நேசமுடன் வாழ்த்துகிறேன்
அந்நியனின் புத்தகமே
ஆனந்தமாய் வாழியவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கு ஒரு கவிதை

காதலுக்கு ஒருதினம்...!
காத்திருந்தோர் கொண்டாட்டம் !
நோதலே கண்டவர்க்கோ
வேகும் மனத் திண்டாட்டம்... !

சொத்துகள் சூழ இங்கு
சொக்க வைக்கும் அழகிருந்தால்
கொத்திச் செல்வதற்கோ
கொக்குகள் பலவும் உண்டு!

தேடிப் போகும் காதல்
தேளாய் கொட்டக் கூடும்!
அண்மித்து வரும் காதல்
துணிவின்றேல் தூரப் போகும்!

காதலின் பெயரைச் சொல்லி
கற்பைச் சுவைத்த பின்னர்
கைகழுவி நழுவுகின்ற
கயவர்கள் கூட்டம் உண்டு

காதல் போல் கண் சிமிட்டி
சாவிற்கே வழி காட்டும்
சாகசக் கன்னியரும்
சமூகத்தில் சிலர் உண்டு !

நேர்மைக் காதலுக்காய்
சாதிச் சுவர் தாண்டி
வேர் விட்ட உறவிழந்து
வேதனைப் படுவோர் உண்டு

இழந்த காதலுக்காய்
இதயத்தால் அழுகின்ற
அப்பாவி முதியவரும்
இப்புவியில் பலர் உண்டு

காதலித்தால் மட்டுமே
கை கூடி வருவதில்லை
காதலுக்கு உகந்தவராய்
மாறினால் மார்க்கமுண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியும் நாய்களும்

காட்டிலே ஒரு கலகம்...!
வாட்டும் கொடிய
பிணந்தின்னிக் கழுகின்
அகோர ஆட்சியினால்
இளைய விலங்குகள்
கொதித்து எழுந்தன!

கழுகின் குகையை
சூழ்ந்து கொண்டன!
பயந்த கழுகோ
பறந்தே போனதே!

கழுகின் கதிரையிலே
கண் வைத்த நரியொன்று
காலம் கனிந்ததென்று
கண் சிமிட்டி வந்தது!
அத்தனைக்கும் தலையாட்டி
அரியணையில் அமர்ந்தது!

"நீதி கேட்டு வந்த
நேசப் பிராணிகளே!
உங்களின் உரிமைக்காய்
உழைப்பேன் சத்தியமே"
நரியாரின் நளினமொழி
இளைய பிராணிகளை
இன்பக் கடல் தள்ள
துள்ளிக் குதித்துப் பின்
தூங்கப் போயின!

அன்றைய இரவே
ஆணை பிறந்தது!
நரிமொழி கேட்ட
ஓநாய்ப் படைகளோ
ஓடிப் புகுந்து
தேடி அழித்தன!
தூங்கிய பிராணிகளை
தூக்கிப் பின் தாக்கின!
போர்த்திய இலைகுழையை
பிடுங்கியே எறிந்தன!
அறிய பிராணிகளோ
அழுதபடி ஓடின!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாய் விடுத்தது
அன்பான அறிவிப்பு!
பிரிந்தே நிற்கின்ற
பிரியப் பிராணிகளே!
உங்களின் கூச்சலினை
உள்ளத்தே கொண்டேன்!
தனித் தனியே பேசியே
தணிப்பேன் தாகத்தை
இனிக்கப் பேசியே
இளித்தது நரியுமே!

தனித்தனியே அழைத்து
இனிப்புப் பானங்களும்
பிரியமாகவே பிரியாணியும் தர...
நக்கிய நாய்களோ
தமக்குள்ளே உறுமி
குரைத்துப்பின் ஊளையிட்டு
குதித்தோடிப் பிரிந்தன!

நரியும் நகைத்தது!
வரியாட்சி செய்தது!
பச்சைப் புழுக்களினால்
பலங் கொண்டு காட்டில்
சோழப் பயிர்களினை
நாளும் மேய்ந்தது!



உதயன் - சூரியகாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூசாது பெறுகின்ற ஆசான்கள் சிலருக்காக !

எத்தனை பாடுபட்டு
எடுத்தீர் உத்தியோகம்
என்பதையும் மறந்தீர்!
நம்பி வரும் பிள்ளைகளை
நட்டாற்றில் விட்டீர்!
போக்குவரத்துச் சிக்கலென்று
போக்குக் காட்டுகிறீர்!
சங்கத்தார் கால் பிடித்து
சந்ததியை அழிக்கின்றீர்!
உங்கள் பிள்ளைக்கு
நகரப் பெரும் பள்ளி தேடி
நாளெல்லாம் அலைந்திடுவீர்!
உங்களையே நம்பிவரும்
ஏழைப் பிள்ளைகளை
ஏளனமாய் புறந்தள்ளி
எப்படியோ வாழுகிறீர்!
நீண்ட விடுமுறையால்...
நீங்காத வறுமையினால்...
நீங்கிச் செல்லும் மாணவரை
நிலை நிறுத்த வர மாட்டீர்!

கொரோனாவும் கொடியாவரும்
கொண்டு போன கல்வியினை
மீண்டும் நிலை நாட்ட
மனம் வரா மன்னவரே!
எப்படித்தான் பெறுகின்றீர்?
கூசாது சம்பளத்தை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிந்து போன மனித நேயம்

உலகமெங்கும் உயிர்கள் தோன்றி
உயரிய விலங்காய் திகழும் மனிதம்
கலை வாழ்வில் கயமைகள் கழிந்து
தளரும் நேயம் தழைத்திட வேண்டும்

மனித வாழ்வு மகத்துவமாக
புனித தூதர் பூமிக்கு வந்தார்
அன்பு நெறிகள் பலவும் உணர்ந்தார்
கனிவு கொண்டு போதனை செய்தார்

ஆயும் அறிவால் ஆதிக்கம் பெற்றவன்
ஓயா உழைப்பால் ஆதிக்கம் பெற்றான்
பேதங்களையே பின் வேதங்களாக்கி
வாதங்கள் செய்து வாழ்வை அழித்தான்

வேரோடறுக்கும் வேதனைப் போர்கள்
நீறாய் உலகை பொசுக்கிப் போட
மடிந்து போன மனித நேயத்தால்
விடிவை விட்டு விலகும் உலகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமும் தாக்கமும்

வலது கையின்றியே
வந்தார் வயோதிபர் !
சலரோகத்தால் வந்து விட்ட
சங்கடமோ என்றேன்!
கணநேரத் தூக்கத்தால்
கைபோனது என்றார்
விளக்கிச் சொல்லுமாறு
விழிகளால் கேட்டேன்!
வாகனைச் செலுத்துகையில்
வந்தணைத்த தூக்கத்தால்
மரத்தோடு மோதுண்டு
கரம் போன கதை சொன்னார்!



தூக்கத்தால் தொடருகின்ற
துக்கங்கள் பல கண்டேன்!
விமானப் பாதையன்று
வீதியென உணர்ந்திடுவோம்
விழிப்பாய் வழி நோக்கி
உயிர்ப்பறவை காத்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிகளும் வேலிகளும்

வேலிகள் பயிர்களை
மேய்கின்ற மண்ணிலே
வேலியான தாலிகள் கூட
காலிகள் கைகளில்
கொள்ளை போகிறதே!

உயிரைச் சுமக்கும்
கர்ப்பிணிப் பெண்ணையும்
உதைத்து வீழ்த்தி
உள்ளதோர் தாலியை
பதைக்கப் பறிப்பதை
பார்த்திடல் தகுமோ?

புலிகளை ஒழித்திடப்
பலிகள் பல எடுத்தவர்க்கு
கொசுக்களாம் கொள்ளையரை
பொசுக்குதல் அரிதோ?



(தினகரன் வார மஞ்சரி 2019.05.12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமெங்கும் புழுக்கம்

விசிறிகள் சுழன்றாலும்
வியர்க்கும் மனமெங்கும்!
வலியவை மெலியவற்றை
வாய்க்குள் போடுகையில்
நலிவைக் கண்டு பதைக்கும்!
ஒன்று பட்டதால்
கண்ட சுதந்திரம்
தின்று தீர்க்குமே தினமும்!
நிலங்கள் போன பின்
நலங்கள் தான் ஏது?
பலங்களை நாடும் பட்டறிவு!
வல்லரசுப் பூதங்கள்
வகுக்கின்ற சட்டங்கள்
தம்மிருப்புக்கே திட்டங்கள்!
மாலையுடன் மாநடிகர்
மார்தட்டி வருகையிலே
கால் தொட்டு வழிபடவோ
காலமெல்லாம் விழிகள்?

(2022.12.25 உதயன் சஞ்சீவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வளம் காப்போம்...!

சூரியப் பந்தின்
வீரிய வீச்சினிலே
நீரினைத் தேடியே
நீங்கி விடும் உயிரெல்லாம்!

நாளையை மறந்தே
நாம் பெற்ற நன்மைகளால்
மழை குன்றிப் போனதே
பிழை மலிந்த நாடெங்கும்!

வாள் வெட்டு வாழ்வினையே
வாட்டி எடுக்கையிலே
மின்வெட்டும் சேர்ந்தே
மிரட்டிக் கொல்கிறதே!



மண்ணைக் குளிர்விக்க
மரங்களை நாட்டிடுவோம்!
நாளைய சந்ததிக்காய்
நம் மண்ணைக் காத்திடுவோம்!

(தினகரன் வார மஞ்சரி 2019.06.30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புகளும் நற்புகழும்

வாழ்க்கைப் பயணத்தில்
வளங்கள் பெற வேண்டின்
நற்புகழதைத் தருகின்ற
நட்புகளை நாடிக் கொள்!

கண்முன்னே கலகலத்து
உன் பின்னே குழி பறிக்கும்
துரோகிகளைக் களையின்
வருமிடர் தான் வேறுண்டோ?

பாலைவனப் பயணத்திலும்
பாலையே வார்க்கின்ற
நண்பர்கள் சிலருண்டேல்
நலம் பெறும் நம் வாழ்வு!

இடறி விழுகையிலே
இதயக் கரம் கொடுத்து
கனவுகளை வசமாக்கும்
நண்பர்களே வரமாகும்



2022.10.09 வலம்புரி சங்கு நாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தலைவர்களுக்காக...

சூறைக் காற்றினிலே
சூடம் எரிப்பது போல்
நச்சுச் சூழலிடை
நம் பிஞ்சுகள் வளருகிறார்!

குருத்துகளைக் கருக்கவென
விரித்த வலைகள் பல..!
குறிப்பால் உணர்ந்தாலே
குறிக்கோளை அடைந்திலாம்!

விலைவாசி ஏற்றம் வந்து
விலங்கடலாம் கல்விக்கு!
போதைப்பொருள் பழக்கம்
பொசுக்கிடலாம் பிஞ்சுகளை!



தடைகள் பல தாண்டி
தடம் பதிக்க வேண்டாமோ
நாளைய தலைவர்களை
நாம் செதுக்க வேண்டாமோ?

(2022.10.09 தினகரன்) வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள் நஞ்சு புதைத்தோம்

தொன்மை உலகத்தில்
மென்மை மனங்கொண்டு
பன்மைச் சமூகங்களை
பாசத்தால் பிணைக்க
எத்தனை ஞானியர் தாம்
ஏற்ற வழி சொன்னார்?

வீற்றிருந்த வாழ்வெல்லாம்
வீழ்ந்த கதை கண்டும்
ஆதிக்க மனத்தாலே
ஆண்டவனை மறந்தோம்!
நீதியினைப் புதைத்தோம்!!

மகாபாரதம் சொல்லும்
மகத்துவ போதனையை
மனத்திலே மறந்தோம்!
மண்ணாசை மன்னர்கள்
மண்ணான கதை கண்டும்
மண்ணாசையாலே
மாண்பிழந்தோம்

இராமாயண காவியத்தில்
இடித்துரைக்கும் அறம் மறந்து
பெண்ணாசை அலைக்கழிக்க
புலன் வழி மனம் செல்ல
புகழ் நீங்கிப் புதையுண்டோம்!

பொன்னாசை நீங்கிடவே
பொன்மனச் செம்மல்கள்
பொன்மொழிகள் பொழிந்தும்
பொன்னாசை பொங்கியதால்
நிம்மதியைத் தொலைத்தோம்
மனத்துக்கண் மாசின்றி
மாண்பினை என்று காண்போம்?

(2022.10.09 தினகரன்)
(2022.12.11 வாரமலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக்கினிப் புழுக்களை நாக பாம்பு ஆக்காதீர்...!

உள்ளூர் ஆட்சித் தேர்தல்
உருப்படியாய் நடக்குமென
வரும்படி அரசாங்கம்
கங்கணம் கட்டியதே!

வாயெல்லாம் பற்களாய்
வருவார்கள் வேட்பாளர்!
உறவு முறை சொல்வர்
உறுதி மொழிகள் பொழிவார்!

சிறு நிதியும் தந்தே
சிந்தை குளிர வைப்பார்!
அன்னாரை உரமேற்றி
அன்புடனே அனுப்புங்கள்!

அற்புத வாக்குகளை
அற்ப நலனுக்காய்
விற்க முன்னாலே
சற்றேனும் சிந்திப்பீர்...!

தாய் மதமும் தாய் மொழியும்
தம் இரு விழிகளென
தாங்கிச் சுமப்பாரா?
கோமாதா எனப்போற்றும்
பசு மாட்டைக் கறியாக்கும்
பாதகம் தடுப்பாரா?

மானிட நேயமெங்கும்
மண்ணிலே வரவேண்டி
மனதார உழைப்பாரா?

அரச பணி செய்பவரை
அச்சுறுத்த முனையாது
அறப்பணிகள் செய்வாரா?

அதிகாரம் வழங்க முன்பே
ஆழமாய் யோசிப்பீர்
நாக்கினிப் புழுக்களினை
நாக பாம்பு ஆக்காதீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிக்கின்ற இளமை

பள்ளி முன் வெளியல்
பட்டங்கள் ஏற்றியதும் ...
எருக்கலைப் புதர்களிடை
மிதிவண்டி செலுத்தியதும்...
ஆட்டுக்குப் புல்தேடி
தோட்ட வழி திரிந்ததுவும்...
பொன் வண்டுகள் பிடிக்க
கிளுவை பல கண்டதுவும்...
மித்திரன் பத்திரிகை
கதை படிக்கத் துடித்ததுவும்...
வானொலியே துணையாக
பாயிருந்து படித்ததுவும்...
தென்னை மட்டை கொண்டு
துடுப்பாட்டம் செய்ததுவும்...
ரியூட்டறியே அறியாமல்
வாசித்துக் களித்ததுவும்
இப்போது நினைக்கையிலே
இனிக்கிறதே மனமே!



(2022.11.27 வலம்புரி சங்குநாதத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாயிரம் கடனும் அண்ணனும்...!

பட்டப் படிப்புக்காய்
பட்டணம் போவதற்கு
ஐயாயிரம் ரூபாவை
வெளிநாட்டு அண்ணனிடம்
கடன் கேட்டான் தம்பி !

வந்த பின் அறிவித்தால்
வழங்குவேன் என்று
வார்த்தையால் பந்தலிட்டான்
பரிவோடு போனவன்!

நம்பிய தம்பியினை
தந்திரமாய் தொடர்பறுத்து
தலைநகரில் தவிக்க விட்டான்
தொலை நோக்கு அண்ணன்!

காலச் சக்கரம் சுழல
வாயெல்லாம் பற்களாய்
வருகின்றானே வீட்டுக்கு
நல்லாய் இருக்கிறாயா? என்று...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் தேவதையே...!

ஏமாந்நிப் போகும்
எங்களின் தேவதையே
எச்சாமம் வருவாயோ?
எவ்விதமாய் மறைவாயோ?

வாள் வெட்டு தணிந்ததென
வாட்டம் தவிர்க்கையிலே
மின்வெட்டாய் தொடரும்
மீதிக் கொடுமைகளே!

பரீட்சைக்காய் படிக்கையிலே
பாவி நீ மறைக்கின்றாய்!
துடிக்க விட்டுத் தூரத்தே
சென்று மறைகின்றாய்?

சத்திரசிகிச்சை வேளை
சத்தமின்றி மறைகின்றாய்
வீதிகளை இருளாக்கி
விபத்துகளை விதைக்கின்றாய்!



2022.04.24 அன்று தினகரன்
வார மலரில் வெளிவந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையில் கல்வி

அதிபர் தரம் உயர
அரியதோர் டிப்ளோமா!
வார இறுதியிலே
வாட்டுகிற சூம் கல்வி!

வழமைக்கு மாறாய் போன
வருத்தங்கள் காட்டிவர
கவரேஜ் பிரச்சினையும்
கலகங்கள் செய்கிறதே!

வானம் இடி இடிக்க
வண்ணப் போன் அச்சுறுத்த
இடி மின்னல் தாக்குமென
இதயம் பட படக்கும்!

அறுசுவை உணவின் பின்
அறுவையாய் விரிவுரையே!
கோமா நிலைக்கு உடல்
தானாகச் செல்கிறதே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைக் குண்டுகள்

துடிப்பான சிறுவன் அவன்!
அடிக்கும் அடிபணியான்...!
அழுதபடி வாயிலே
புத்தக மூட்டையுடன்
வீடுபோக முற்படவே
கழுகுக் கண் அதிபர்
கண்டவனை விசாரிக்க...
கண்களில் நீர் ததும்ப
தளதளத்து விம்முகிறான்
மூத்த வகுப்பாசிரியை
அடங்காத அவன் செயலால்
மூர்க்கம் மிகுந்து வர
வீசிய வார்த்தைகளை...
'உன்ரை அம்மா ஆருக்கு
உன்னைப் பெத்தாளோ?'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வளையம் வைக்கும் வரை
# மலர்செண்டு மன்னர்கள்...!

நல்லவற்றை வெறுப்பான்!
நாடகத்தால் பிழைப்பான்
அடியாட்கள் சிலர் கொண்டு
அநியாயம் பல செய்வான்!

ஈடலை திருத்தலென்று
சூட்சுமமாய் சுருட்டுவான்!
கோயில் சொத்துக்களை
கொள்ளையிடும் வழி அறிவான்!

அற்ப காசுக்காய்
அந்நிய மதத்தினையும்
நடுவூரில் நிறுத்துவான்!
அழைக்கின்றார் அவனை
மலர்ச் செண்டு கொடுத்து!

ஊரவர் பணத்தாலே
உத்தம வேடம் பூண்பான்
காணிகள் விதவைகட்கு...
காணிக்கை கற்பு மட்டும்!
எந்த வேளையிலும்
கதவுகள் திறந்திருக்க
எதிர்பார்க்கும் குள்ளனிவன்!

ஊரவர் பணம் திரட்டி
பேரெடுக்கும் பாமரனை
மலர்ச்செண்டு வழங்கியே
மகிழுகிறார் மண்ணாவார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்க நினைத்தவள்

கிளி நொச்சி நகரத்தில்
சுட்டெரிக்கும் வெயில் வேளை!
நகர்ப்புற 'சோடி'யொன்று
நளினமாய் நடை பயில...
'அம்மா... அம்மா...'என அழைத்து
பின்னாலே பெண்ணொருத்தி!
கையிலே குழந்தையுடன்...
சாம்பிராணி பொதி சுமந்து...
கால்களினை இழந்து விட்ட
கணவனை நினைத்தாளோ?
பசியினால் பரிதவிக்கும்
பாலகனை நினைத்தாளோ
பிச்சை தர சொல்லி
பிறரை அவள் கெஞ்சவில்லை
உருட்டுப் புரட்டில்லை!
திருட்டுப் புத்தியில்லை!
உழைத்து உயிர்வாழும்
உயர் குணத்தால் தொடர...
காதில் விழாதது போல்
மறத் தமிழர் விரைகின்றார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய நண்பன்

என் இனிய நண்பன்
மகிழ்ந்திட வந்தான்
காத்திருந்த காதல்
கனிந்த ரகசியத்தை
அப்பாவியாய் மொழிந்தேன் !
அப்படியா? என்றான்
கண்கள் சிவந்திட
பொறாமைச் சுவாலைகள்
பொசுக்கிடும் பார்வையில்
முந்தி விட்டாய் என்று
முறுகத் தொடங்கினான் !
அரக்கப் பரக்க
அவளைத் தொடர்ந்தான்
மனத்தை மாற்றவே
மந்திரம் பல சொன்னான் !
குளத்தைக் கலக்கியே
குதூகலம் கொண்டான்
அறுந்த காதலில்
ஆறுதல் அடைந்தான் !
மனம் போல வாழ்கவென
மனதார வாழ்த்துகிறேன்



(2018.10.07 உதயன் வார மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் உயிர்பெற...!

மனித உறவுகளை
மலினப் படுத்தாது
நாளைய சந்ததியை
நாணயமாய் நடத்து !

வார்த்தைக் குண்டுகளை
வீரமென வீசாதே !
வெல்ல மொழியாலே
வெல்லப்பார் மனங்களையே !

சின்னத் தனங்களினால்
சினந்தீர்க்கும் வல்லவரின்
வில்லத் தனங்களினை
விலக்கி வைத்துவிடு !

உடன்பாடு காணுகின்ற
உயர்ந்த குணத்தாலே
தடம் பதித்து நடந்து
தகைமைகள் பெற்றுவிடு !

பணிவோடு பணியாற்றி
துணிவோடு துயர்போக்கு
கனிவான மொழியாலே
களிப்படைய வைத்துவிடு !

உறவுப் பாலங்கள்
உள்ளத்தே உருவாக
அர்த்த வாழ்வதனை
அகிலத்தே பெற்றுவிடு !



(2022.06.05 தினகரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணர்வு



விழிப்புணர்வாலே
விளைவது காதல் !
மொழிப் புணர்வாலே
மலர்வது கவிதை
களிப்புணர்வாலே
களைவது கவலை
உடந்புணர்வாலே
உருவாகும் மழலை

(2018.10.07 தினகரன் வார மஞ்சரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய ஆசானுக்கு
# இதய அஞ்சலி...!

வைகறைப் பொழுதினிலே
வந்தது ஒரு செய்தி...!
எம் ஆத்ம சூரியனார்
அஸ்தமித்த கதை சொல்லி!

ஐந்தாம் வகுப்பினிலே
அமர்ந்தீர் எம் ஆசானாய்!
வேட்டியுடன் வந்தீரே
பண்பாட்டுப் பொக்கிசமாய்!

பூசிக்கத் தகுந்த
வாசிப்புப் பழக்கத்தை
நேசிக்க வைத்தவரே!
கையெழுத்துச் சஞ்சிகைகள்
படைத்திடவும் பணித்தீரே!

தினமும் காலையிலே
பெரிய புராணமதை
தித்திக்க ஓதியதை
திரும்பிப் பார்க்கின்றேன்!

வயிற்றிலே கிள்ளிய
வலிதானே பலித்தது!
வாங்கிய பிரம்படியால்
வராத கணக்கும் வந்தது!

முப்ப தாண்டின் முன்
முகம் பார்த்த நினைவோடு
சுக மறியத் துடித்தும்
சூழ்நிலை விடவில்லையே!

உங்களுக்கே சமர்ப்பணமாய்
உவப்போடு புத்தகத்தை
உலகறிய அன்று தந்தேன்...
உள்ளத்தே களிப்போடு!

நல்ல விருட்சங்களை
நட்டுவிட்டே சென்றீர்!
விழுதுகளாய் தொழுகின்றோம்
விண்ணுலகும் ஒளி பெறவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் அப்படித்தான்

பதவி உயர்வுக்காய்
பத்திரமாய் சென்றமர்ந்தேன்
பத்தர முல்லையிலே!
கல்வி அமைச்சினிலே
காலைப் பணி தொடங்கும்
கணத்துக்காய் காத்திருப்பு!

பணி தொடங்கும் மணி போலே
தேசிய கீத மது!
காற்றினிலே ஒலிக்கையிலே
ஊசி விழும் ஓசை கேட்கும்

மரியாதை செய்யவென்றே
மனித எந்திரங்கள்
எழுந்தெங்கும் நிற்கையிலே
ஓருடல் மட்டும்
ஓய்ந்திருத்தல் கண்டேன்!

காவியுடை தரித்த
கனவான் அவரென்று
கண்டு கொண்டேன்!
மதம் பிடித்த மண்ணிலே
சமத்துவச் சமாதி கண்டேன்!

(வலம்புரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலோரம் வீசிய காற்று..!

மயிலிட்டிக் கடலோரம்
மையம் கொண்ட மனம்
பள்ளிக்கால நினைவுகளில்
துள்ளித் திரிந்தது!

சமுத்திர அலைக் கரங்கள்
கரையோர முகடுகளை
தழுவிய தருணங்கள்!
மீன் குன்றுகளும்
கருவாட்டு மலைகளுமாய்
வணிக மக்களின்
வான் தொட்ட ஆரவாரம்!
அது ஒரு பரவச காலம்!

கழுகுக் கவனிப்பில்
மௌனித்து கிடக்கின்ற
மயானக் கடலோரமாய்
இன்றைய மயிலிட்டி!
மீண்டும் மிடுக்காகும்
சைவ ஆலயங்கள்...!

தழைக்கின்ற வாழ்வுக்காய்
முளைக்கின்ற வீடுகள்!
தந்திர வலையின் கீழ்
தம்பிக்குத் தருவதற்காய்
அண்ணணிடம் அபகரித்த
படகுக் குவியல்கள்!
கனத்த மனத்தோடு
எந்திரமாய்க் கால்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழத் தெரிந்தவர்கள் !

வார்த்தைகளால் வடை சுடும்
வல்லமை பெற்றவன்...!
வாயாரப் பொய்சொல்வான்
வள்ளலாய் நடிப்பான்...
கிள்ளியும் கொடுக்கான்!
எச்சிற் கையாலும்
காகம் துரத்தான்!
உச்சக் கதை பேசி
மணிகளை விழுங்குவான்!
பொய்களைப் பொழிந்தே
பொழுதினைப் போக்குவான்!
விழுமிய வாழ்வென்று
தொழுதிடுவார் நால்வர்!
பழுதிலா வார்த்தையென
பணிந்திடுவார் வாழியவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திரம் பயில்வோமா?

எந்திர வேகத்தில்
எழுச்சி மிகு சீனா
வடக்கை விழுங்க
வருகிறது பாரென்று
அழுது புலம்புகிறார்
ஞானப் பொக்கிசங்கள்!

தமிழர்தம் உணர்வுகளை
தன் தேவைக்கு இரையாக்கி
உமிழ்ந்து பின் தள்ளியதும்
உதவ வரும் சீனாவா?

மாகாண சபை என்னும்
மயான சபை ஒன்றை
தமிழரைத் தள்ளி வைத்து
தானே கைச்சாத்திட்டு
வீணாக்கிப் போட்டதுவும்
விரைந்து வரும் சீனாவா?

இராணுவம் தனை அனுப்பி
இன்னுயிர்கள் பல கொன்று
தேசத்தை முடக்கியதும்
தேடி வரும் சீனாவா?

உளவுத் தகவல்களை
உளமாரப் பரிமாறி
நயவஞ்சகத் தனமாய்
அழித்ததுவும் சீனாவா?

தந்திர இனத்தவரோ
தழுவுகிறார் இருவரையும்
தமிழர் தரப்பினரோ
தவிக்கிறார் மந்திரத்தால்

பக்கத்தில் பார்த்திருந்து
பாதகத்தை இரசித்தவர்கள்
பதறித் துடித்து வர
பருவமே இதுவன்றோ?

கீரைக் கடைக்கும்
எதிர்க்கடை வேண்டுமென்ற
தந்திரம் பயில்வோமா?
தமிழராய் நிமிர்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு நாடகமோ?

எரிபொருள் அட்டையினால்
உரியது கிடைக்குமென
வரிசையில் வந்தவர்க்கு
வாய்த்ததோ அதிர்ச்சி தான்!

அறுவர் அதிர வந்தார்!
அறுவார் கையிலோ அரிவாள்!
பார்த்தவர் வேர்த்து நிற்க...
காவலர் கண்சிமிட்ட...
உறுமலுடன் புகுந்தார்!
மயானமயாய் மௌனம் காக்க
எரிபொருள் நிரப்புகிறார்
வரையறை ஏதுமின்றி!

பெற்றோல் வியாபாரத்தால்
பெற்ற சுகத்தாலே
நாட்டுக்குள் தொடருகின்ற
கூட்டு நாடகமோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்றும் மனம் தளரா

## பெற்றோல் விக்கிரமன்

பெரிய தம்பி வாத்தியார்
பெற்றோல் பெறுவதற்காய்
பெற்றாரே விடுமுறை!

கோப்பாயில் கோமகனார்
'கியூ'வில் தவம் செய்தார்!
கியூ ஆறா? அட்டைக்கா?
நீண்ட பட்டிமன்றம்
முடிவுக்கு வந்த பின்னும்
நகராது வளரும் பேரணியே!
பெற்றோல் பிணத்தாலே
பிழைக்கின்ற காக்கைகள்
வழிவிடுமோ பணி தொடர?
உச்சிவெயில் தலைக்கேற
உச்சச் சினங்கொண்டு
பசியெடுக்கப் பறந்தாரே ஆசான்!

மருதனார் மடத்தினிலே
வந்தவர் குறைவென்று
வீட்டிங்கு சேதி வர
விரைந்தாரே அங்கே!
விரைவாய் நகர்ந்த அணி
விலைதனை நெருங்குகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை விரித்தார் கடை வைத்தார்
பெற்றோல் முடிந்ததென்று...!
மனமுடைந்த வாத்தியார்
மனைக்குத் திரும்பி வந்தும்
வினை விடவில்லையே!

உரும்பிராயில் மாலை தான்
'பௌசர்' வந்த தென்று
பரவிய செய்தி வர
பாவம்! வாத்தியாரோ
பறந்தாரே அங்கே...!
பெரிதாய் வளராத
பெற்றோல் அணியினிலே
பேருவகையுடன் கலந்தார்!
ஊராமல் விரைகின்ற
அணி கண்டு மனம் துள்ள
அறிவித்தார் நண்பருக்கு
அலைபேசி வழியாக...!

கறிநாளோ அவருக்கு...?
கடமையிடம் நெருங்க
கைவிரித்தார் கடமையாளர்...
பெற்றோல் முடிந்ததென்று!

சற்றும் மனம் தளரா
சங்குருவோ இப்போதும்
விக்கிரமாதித்தன் போல்
வீறு நடையில் வீட்டுக்கு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ரோக்கின் செல்லாதாம்...!

வழமையாய் தூங்கும் வேளை...!
வழியனுப்பும் செய்தி வர...!
முடுக்கி விட்டர் வீட்டார்!
பிள்ளைகளின் தேவை கண்டு
புறப்பட்டேன் ரோக்கினுக்காய்...!

வீதியோரம் சன வெள்ளம்!
விசாரித்துப் பார்த்ததிலே
பச்சை உடை தரித்தோர்
பதிவுப் பணி செய்ய...
இரண்டு கிலோ மீற்றர்
திரண்டிருந்த பேரணியின்
அந்தத்தைக் கண்டறிந்து
அந்தரித்து நின்றேன் நான்!



பின்னே பெண்ணொருத்தி!
பிள்ளையுடன் வந்து நின்றாள்
கட்டியவன் கட்டாரிலாம்
கவலையுடன் சொன்னாள்!
எப்படிப் போவதென
ஏக்கமுடன் நின்றாள்!
வாலிப வல்லூறுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமிடும் வாகனங்கள்
புழுதிப் புயல் கிளப்ப
வளரும் பேரணியில்
வந்தாரே பல பெண்கள்!
அயலூர்கள் பல கடந்தும்
வந்திருந்தார் ரோக்கினுக்காய்!
நான்கு மணிநேரம்
நகராத பேரணியோ
நரகமாய் பட்டதனால்
நகர்ந்தேன் வீடு நோக்கி...

மறு நாள் விடிகையிலே
ரோக்கினுடன் சிலர் வந்தார்!
வாரங்கள் சில கடந்தும்
வராத பெற்றோலால்
விசாரித்துப் பார்த்ததிலே
விளங்கியது உண்மையொன்று
'அந்த ரோக்கின் செல்லாதாம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானமயில் ஐயாவின் கனவுகள் நனவாக ...

சமூக ஊனங்கள்
சுமூகமாய் மறையவென
பேனாக் கலப்பையினால்
மனத் தரிசை உழுதவரே !

அச்சுறுத்தல் பலவற்றை
அனுதினமும் எதிர்கொண்டும்
அச்சமின்றி அறங்காக்க
உச்சப்பணி செய்தவரே !

பொறியியல் படிப்பென்னும்
அறிவியல் ஆர்வத்தினை
பாதி வழி நிறுத்திவிட்டு
பத்திரிகை தந்தவரே

பத்திரிகைத் துறைவந்த
பலரையும் பட்டைதீட்டி
ஆசிரிய தலையங்கம்
அற்புதமாய் வடித்தீரே !

கானமயில் ஐயா! உம்
கனத்த பணி ஓய்ந்தாலும்
இனத்தீபமாய் என்றும்
இதயத்தில் சுடர்வீரே !

(உதயன் சஞ்சீவி 2021.11.28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரைசிங்கப் பெருந்தகையே துயர் தந்து சென்றீரோ?

வெள்ளி மலை மீதினிலே
துள்ளி வந்த சூரியனே!
கொள்ளி வைக்கும் வேளையிலே
துடிக்குதையா எம் இதயம்!

சுன்னாகம் கிழக்கினிலே
உன்நாமம் சுடர்விடவே
எந்நாளும் தமிழ்ப்பணிகள்
ஏற்ற முறைச் செய்தவரே!

அதிபராய் கல்வி ஒளி
தந்த தமிழ்ச் சுடரே!
வலம்புரியும் வளம் காண
வழி காட்டிச் சென்றவரே!

புத்தகங்கள் பல தந்து
புத்தொளி பரப்பி வந்தீர்
நித்தமும் நினைத்திடுவோம்
நீடு புகழ் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை காலமோ?

போதைப் பொருள் பெருகி
பாதைகளை மாற்றுதலும்...
அரசைத் துறந்த மகான்
அரசடியில் குந்துதலும்...
பச்சை வேலிகளே
பயிர்களை அழித்தலும்....
காலிகளின் புகலிடமாய்
காவல் நிலையங்களும்...
எங்கிருந்தோ வருபவர்கள்
எம் வளங்கள் சுரண்டுதலும்
ஊழலும் இலஞ்சமுமே
சட்டவலை பின்னுதலும்...
மரங்களைக் காப்பதாய்
கோடரிக் காம்புகளும்...
இன்னும் இன்னும்
இப்படி எத்தனையோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இலக்கிய விழா - 2022

கலாசார அலுவல்கள் திணைக்களம்
மற்றும்

யாழ்ப்பாண மாவட்ட செயலகம்

இணைந்து நடாத்தும்
பிரதேச இலக்கியப் போட்டித் தொடரில்

............ஊனையும்....உலையும்.........
எனும் தலைப்பை முன்வைத்தமைக்காக

...திறந்த... பிரிவில் ....கவிதை.......... போட்டியில்

~~முதலாம்~~ / இரண்டாம் / ~~மூன்றாம்~~ இடத்தினைப் பெற்றுக்கொண்ட

................இ. ஜெயக்குமார்..... அவர்களுக்கு

2022 ஆம் ஆண்டின் புரட்டாதி மாதம் ....30.... ஆம் திகதி
நடாத்தப்பட்ட

**பிரதேச இலக்கிய விழாவில்**

இச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக
உறுதிப்படுத்தப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதேச செயலாளர் | தரணி அனோஜா கமகே |
| பிரதேச செயலகம் | கலாசார அலுவல்கள் பணிப்பாளர் |
| கோப்பாய் | கலாசார அலுவல்கள் திணைக்களம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கவிதைத் தொகுப்பு நூலான அனுபவங்களும் அனுமானங்களும்
2018.02.18 அன்று உரும்பிராய் இந்துக்கல்லூரியில் வெளியிடப்பட்டது
அதன் நிழற்படங்கள் சில...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...

இந்நூலாசிரியர் இரா ஜெயக்குமார் எனக்கு மிகவும் பரிச்சயமானவர். யா/உடுவில் மான்ஸ் த.கக. பாடசாலையில் அவர் அதிபராக இருந்த போது அவர்களுக்கான கோட்டப் பணிப்பாளராக நான் கடமை யேற்றேன். திரு.ஜெயக்குமார் அவர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என பணியாற்றும் பேறு பெற்று மகிழ்ந்திருந்தார். அக் காலங்களிலும் கூட அவர் எழுதிக் குவித்தார். அவரின் ஆக்கங்களை உள்ளூர் பத்திரி கைகள் பிரசுரித்துப் பெருமைப்பட்டன. இதைவிட அவர் ஒரு சிறந்த பத்தி ரிகையாளராகவும் செயற்பட்டிருக்கிறார். தினக்குரல், வலம்புரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் ஆக்கங்கள் வெளிவந்து இவரை சிறந்த ஆளுமையாளராக காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரா. ஜெயக்குமார் இடைக்காலத்தில் சொந்தமாகவே 'கண்மணி' எனும் மாணவர் பத்திரிகையை நடாத்தி எமது சமூகத்திற்கு நல்வழி காட்டியுள்ளார். மாணவர்களுக்காக பல பாடப் புத்தகங்கள், வினா விடைகள் என்பனவும் எழுதி வெளியிடப்பட்டமை கண்கூடு. அவற்றில் பலவற்றை நானும் வாங்கியிருக்கிறேன். அந்நூல்கள் வாயிலாக அவரின் புலமையையும் கண்டு இரசித்துள்ளேன். இக்காலத்தில் அவரின் பன்முக ஆளுமையை என்னால் அவதானிக்க முடிந்தது. நான் நடாத்திக் கொண்டிருந்த முத்துப்பந்தல், போன்ற சமூக வலைகளில் அவரின் கைவண்ணங்களைக் கண்டு நான் பல தடவைகள் வியந்திருக்கிறேன் .நேரடியாகப் பாராட்டியுமிருக்கிறேன்.

நேரந்தவறாமை என்பதும், தன் கடமை நேரத்தைக் கடமைக்காக அர்ப்பணிப்பதும், அந்த நேரத்தை அதற்கன்றி சொந்த வேலை எதற்கும் ஒதுக்காத உயர் பண்பும் இவரது சிறப்புக்களாகும். இதைவிட சர்வதேச ரீதியில் பல நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களோடு ஐக்கியம் கொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. மேலும் இரா. ஜெயக்குமார் ஒரு துணிச்சலான பத்திரிகையாளர். சுட்டெரிக்கும் சூரியன் போல பிழைகளை நேருக்கு நேராகப் பிழை என்று கூறும் இவரது தைரியத்தை இவரது கவிதைகளிலும் காணலாம். இந்தளவு ஆளுமை பொருந்திய ஒருவரின் நூலை வாசிப்பது என்பது உங்களை பல மடங்கு மேன்மையாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இரா ஜெயக்குமார் அவர்கள் எழுதிய "இன்னும் எத்தனை காலமோ" என்ற கவிதை நூலுக்கு அறிமுக உரை எழுதக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும்பேறாகக் கருதுகிறேன். அத்தகைய சந்தர்ப்பம் தந்த திரு.ஜெயக்குமார் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

**திரு.செ.மோகநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு), உடுவில்.

9 781234 567897

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org